# உதயன்

சுடர் : 36 கதிர் : 264 | வியாழக்கிழமை | ஆவணி 3ஆம் நாள் 19 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## கொழும்புத் தொற்றாளரில் 90 வீதமானோருக்கு டெல்டா

கொழும்பு, ஓக. 19
கொழும்பு மாவட்டத்தில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களில் 90 சதவீத மானோர் டெல்டா தொற்றாளர்கள் எனத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல்துறை பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
இதேவேளை- நாட்டில் 7 ஆயிரம் தொற்றாளர்கள்

19 >

# வீடுகளிலிருந்து ஒருவர் மட்டுமே வெளிச்செல்லலாம்!

## கூட்டு வழிபாடுகளுக்கும் தடை நேற்று வெளியானது புதிய அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 19
நாடு முழுவதும் இன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில், வீட்டிலிருந்து ஒருவர் மட்டுமே வெளியே செல்ல முடியும். அதுவும், அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே வெளிச்செல்லமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, விகாரைகள், கோவில்கள், பள்ளி வாசல்கள் மற்றும் தேவாலயங்களில் கூட்டாகச் சேர்ந்து வழிபடுவது தடைசெய்யப்பட்டு, தனியான வழிபாடுகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

19 >

## மூன்று வாரங்களுக்கு முழு முடக்கம் வேண்டும்!

*சுதந்திரக்கட்சி வலியுறுத்து*

கொழும்பு, ஓக. 19
கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் இரு வாரங்களுக்கு முழு ஊரடங்கு உத்தரவைப் பிறப்பிக்குமாறு அரச பங்காளிக்கட்சி

19 >

## ஒரே நாளில் தொற்று 3,660

கொழும்பு, ஓக. 19
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 3 ஆயிரத்து 660 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத்

19 >

## நாட்டை பகுதியளவில் திறந்து முன்னோக்கிச் செல்வோம்

*சுகாதார அமைச்சிடமே இறுதி முடிவு கூறுகின்றார் அமைச்சர் டலஸ்*

(பக்கம் 03)

## கொரோனாவால் மருத்துவர் சாவு

கொழும்பு, ஓக. 19
கொழும்பு வடக்கு போதனா மருத்துவமனையில் (ராகம) பணியாற்றிவந்த மருத்துவர் ஒருவர் கொரோனாத் தொற்றால் நேற்று

18 >

## கொரோனாவால் யாழில் நேற்றும் ஒரு சாவு

யாழ்ப்பாணம், ஓக. 19
யாழ்ப்பாணத்தில் கொவிட் 19 நோய்த் தொற்றால் நேற்றும் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த

19 >

## கொரோனாவால் 170 பேர் சாவு!

கொழும்பு, ஓக. 19
இலங்கையில் மேலும் 170 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல்

18 >

## புதுக்குடியிருப்பில் குருதிப் படிவுடன் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஓக. 19
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட றெட்பானா பகுதியில் விறகு வெட்டிக்கொண்டிருந்த குடும்பத் தலைவர்

19 >

இந்திய திருச்சி முகாமில்

## வயிற்றைக் கிழித்து ஈழத்தவர் போராட்டம்

சென்னை, ஓக. 19
திருச்சி சிறப்பு முகாமில் சில நாள்களுக்கு முன்னர் உணவுதவிர்ப்பில் ஈடுபட்ட இலங்கை தமிழர்கள், நேற்றுத் தொடக்கம் மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இதன்போது, ஒருவர் உடலைக் கூரிய ஆயுதத்தால் கிழித்துக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டமையால் அங்கு

19 >

## 10 நாள்களுக்கு நாட்டை முடக்கி 10 திட்டங்களை செயற்படுத்துக

*தவறின் திங்கள் முதல் அதிரடி நடவடிக்கை தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிவிப்பு*

கொழும்பு, ஓக. 19
கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்கு விஞ்ஞானபூர்வமான முடக்கமே அவசியம். இது தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமைக்குள் அரசு அறிவிப்பொன்றை விடுக்கவேண்டும். தவறின், எதிர் வரும் திங்கட்கிழமை தொடக்கம் நாட்டை பலவந்தமாக முடக்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று இலங்கை அரச மருத்

19 >



வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர்

## கேதீஸ்வரனுக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஓக. 19
வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில்

19 >


## பலவீனமாகிவிட்டது அரசு!

*எல்லேகுணவங்ச தேரர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 19
"அரசு பலவீனமடைந்துள்ளது. ஆலோசனை வழங்கி இனிப் பயனில்லை. வசதி படைத்தோர் இல்லாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்"

19 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு தேசிய மருத்துவமனையில்

# மருத்துவர், தாதியர் உட்பட 265 பேருக்கு மேல் தொற்று

கொழும்பு, ஓக. 19

கொழும்பு தேசிய மருத்துவமனையின் தாதியர்கள் மற்றும் மருத்துவர்கள் உட்பட 265 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை வழங்கப்பட்ட விசாரணை அறிக்கைகளின்படி இந்த விவரம் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 27 மருத்துவர்கள், 105 தாதியர்கள் மற்றும் 133 சிற்றூழியர்கள் அடங்குகின்றனர்.

அத்துடன் மேலும், 600 க்கும் மேற்பட்ட கொரோனா நோயாளிகள் தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-சி)

கொரோனாத் தொற்று, சாவு பற்றிய

# தரவுகள் மாற்றப்பட்டனவா? புதிய அமைச்சர் விசாரணை

கொழும்பு, ஓக. 19

"கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்பு தொடர்பான எண்ணிக்கை திட்டமிட்ட அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டிருக்குமானால் அது பெரும் தவறாகும். இது தொடர்பில் விசாரணை நடத்தி, உண்மையைத் தெளிவுபடுத்தும் பொறுப்பு புதிய சுகாதார அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது." என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுற்பகல் நடைபெற்றது.

இதன்போது, கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கை திட்டமிட்ட அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளமை, சரியான தகவல்கள் வெளியிடப்படுவதில்லை என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனாத் தரவுகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டது. ஏதேனும் மனித வழுவால் தவறிழைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அந்தத் தவறு சரிசெய்யப்படும். ஆனால் திட்டமிட்ட அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதால் அது தொடர்பில் விசாரணை நடத்தி, உண்மை நிலைமையைத் தெளிவுபடுத்தும் பொறுப்பு புதிய சுகாதார அமைச்சருக்கு இருக்கின்றது. அவர் அதனை செய்வார் என நம்புகின்றோம்.

மக்கள் தற்போது உயிரையே பாதுகாக்குமாறு கோருகின்றனர். எனவே, பிழையான தகவல்களை வழங்கி மக்களைத் தவறாக வழிநடத்தும் எந்தவொரு தேவையும் அரசுக்குக் கிடையாது. இது விடயத்தில் உண்மையைக் கண்டறியும் பொறுப்பை சுகாதார அமைச்சுக்கு வழங்குவோம்." -என்றார். (த-44)

# கிளிநொச்சி வர்த்தக நிலையங்கள் புதன்கிழமைவரை மூடப்பட்டிருக்கும்

## கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தினர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஓக. 19**

**கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்து வருவதால், அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி நகர வர்த்தகர்கள் அனைவரும் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமைவரை தங்கள் வர்த்தக நிலையங்களைப் பூட்டுவதற்கு தீர்மானித்துள்ளனர் என்று கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தினர் தெரிவித்தனர்.**

இது தொடர்பில், கிளிநொச்சி ஊடக அமையத்தில் நேற்றுமாலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் வர்த்தகர் சங்கத்தின் தலைவர் இ.விஜயசிங்கம், செயலாளர் ச.பாஸ்கரன், பொருளாளர் க.ஆனந்தவடிவேல் ஆகியோர் கலந்துகொண்டு இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. நேற்று (நேற்றுமுன்தினம்) மாத்திரம் 257 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது ஆபத்தான நிலைமை. எனவே வர்த்தகர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது வர்த்தக நிலையங்களை சில நாள்களுக்கு மூடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். இதன்மூலமாக தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கின்றோம்.

அதன்படி, நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் புதன்கிழமைவரை மருந்தகங்கள், வாகன திருத்தகங்கள் தவிர ஏனைய அனைத்து வியாபார நிலையங்களையும் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் வர்த்தகர்கள், தமது இருப்பிடங்களுக்கு அருகிலுள்ள கொவிட் -19 பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் தங்களை பரிசோதித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். எமது மக்களைப் பாதுகாப்பதற்கு அனைத்து வர்த்தகர்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றோம். -என்று தெரிவித்தனர். (த-214-6-113)

சாவகச்சேரி மருத்துவமனையில்

# இரண்டாவது தடுப்பூசியை சனிக்கிழமை பெறமுடியும்

சாவகச்சேரி, ஓக. 19

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த ஜூலை மாதம் 10 மற்றும் 17ஆம் திகதிகளில் முதலாம்கட்ட கொரோனாத் தடுப்பூசி ஏற்றியவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி மருந்து கிடைத்துள்ளது.

எனவே, மேற்குறித்த திகதிகளில் முதலாம்கட்ட தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு இரண்டாவதுகட்ட தடுப்பூசி நாளைமறுதினம் சனிக்கிழமை மருத்துவமனையில் வைத்து ஏற்றப்படவுள்ளது என்று மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் திருமதி டயாளினி மகேந்திரன் தெரிவித்தார். (த-9)

# காட்டிக்கொடுத்தால் 25 லட்சம் ரூபா பரிசு

கொழும்பு, ஓக. 19

மாவனல்லையில் புத்தர் சிலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் வழங்கிய நபருக்கு, அரசு 2.5 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

மொஹமட் ரசிக் மொஹமட் டாஸ்லின் என்பவரே அவ்வாறு தகவல் வழங்கியிருந்தார். அதற்காக குறித்த பணத்தைப் பெற்றுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கை பொலிஸ் துறையால் ஒதுக்கப்பட்ட மேற்குறித்த நிதியை, பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர குறித்த நபருக்கு வழங்கினார். (த-சி)

வவுனியா நகரிலுள்ள கடைகள் மூடப்படா

# சுகாதார நடைமுறைகளை அவதானித்தே இறுதிமுடிவு

வவுனியா, ஓக.19

வவுனியா நகரில் அமைந்துள்ள வியாபார நிலையங்களை மூடுவதற்குப் பதிலாக சுகாதார நடைமுறைகளைப் பேணி வழமையான செயற்பாடுகளை முன்னெடுப்பது என்று நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில், பல்வேறு நகரங்கள் சுயமாக மூடப்பட்டு, மக்களும் வியாபார நிலையங்களின் நடத்துநர்களும் தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில், வவுனியா மாவட்டத்தில் அண்மைய நாள்களாகக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. உயிரிழப்பும் சடுதியாக ஏற்பட்டுவருகின்றது.

இதனையடுத்து வவுனியா நகர வியாபார நிலையங்களை மூடுமாறு பல்வேறு தரப்புகளிலிருந்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியா வர்த்தகர் சங்க அலுவலகத்தில் நேற்றுமாலை நடைபெற்றது.

இதன்போது, கடைகளை இப்போதைக்கு மூடுவதில்லை -என்றும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பேணி நகரத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பது -என்றும் சுகாதார நடைமுறைகளுடனான செயற்பாடுகளை ஒரு வாரத்துக்கு அவதானித்தபின்னர் மேற்கொண்டு முடிவு எடுப்பது -என்றும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம், மாவட்ட விவசாய சம்மேளனம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், ஊடகவியலாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (த-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு முழுமையாக முடங்காது

# பகுதியளவு திறந்துவைத்து முன்னோக்கிச் செல்வோம்!

### திட்டம் சொல்கின்றது அரசு

**கொழும்பு, ஓக. 19**

**நாட்டை முழுமையாக முடக்கும் தீர்மானம் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. தடுப்பூசி திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து நாட்டை பகுதியளவேனும் திறந்து வைப்பதற்கான அணுகுமுறையே பின்பற்றப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு அறிவித்துள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு விஞ்ஞானபூர்வமான முடக்கத்தை அரசு மேற்கொள்ள வேண்டும், அவ்வாறு இல்லாவிட்டால் திங்கட்கிழமை முதல் நாட்டை சுயமாக முடக்குவதற்கான தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தொழிற்சங்கங்களால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான டளஸ் அழகப்பெரும மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கொரோனா வைரஸ் விவகாரம் தொடர்பில் உலகில் மூன்று அணுகுமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. ஒன்று, நாடு முழுமையாக மூடப்படுகின்றது. 2ஆவது நடவடிக்கையாக தடுப்பூசியின் 2ஆவது டோஸை 40 வீதமானோருக்கு வழங்கிய பின்னர் நாடு முழுமையாக திறக்கப்படுகின்றது. 3ஆவது அணுகுமுறையாக குறிப்பிட்ட சில தொகையினருக்கு தடுப்பூசியை வழங்கி, நாடும் பகுதியளவு திறக்கப்படுகின்றது. அந்தவகையில் எமது நாட்டில் 3ஆவது அணுகுமுறையை கடைப்பிடிப்பதற்கு சுகாதார அமைச்சும், கொரோனா ஒழிப்பு செயலணியும் தீர்மானித்துள்ளன. நாட்டில் பல வலயங்கள் மூடப்பட்டுள்ளன. பாடசாலைகள் ஒன்றரை வருடங்களாக மூடப்பட்டுள்ளன. எனவே, இவ்விவகாரம் தொடர்பில் சுகாதார அமைச்சுதான் இறுதி முடிவை எடுக்க வேண்டும். அதேபோல் என்ன நடந்தாலும், நாடு முடக்கப்படாது என்ற பிடிவாதப் போக்கிலும் அரசு இல்லை என்பதையும் கூறியாக வேண்டும்.

நாட்டில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனக் கூறவில்லை. அதற்கான பரிந்துரையை சுகாதார அமைச்சுதான் முன்மொழிய வேண்டும். நாட்டில் அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்கள் சுமார் 2 மில்லியன்வரை இருக்கின்றனர். அத்துடன், தொழில் இல்லாத 8 மில்லியன் பேர் இருக்கின்றனர். இவர்கள் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது. அதனால் தான் 3ஆவது அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது' -என்றார்.

அதேவேளை, இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சரவை இணைப்பேச்சாளர், அமைச்சர் ரமேஷ் பத்திரண கூறியவை வருமாறு:

'இதற்கு முன்னரும் நாடு முடக்கப்பட்டது. தொழில் இல்லாமல் பலர் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு நிவாரண நிதியாக 8ஆயிரம் கோடி ரூபாவரை அரசால் வழங்கப்பட்டது. நாட்டை முடக்கினால் தற்காலிகமாக தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைகின்றது. அதன்பின்னர் அதிகரிக்கும் நிலைமை காணப்படுகின்றது. மாகாணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அரச ஊழியர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் தேவைக்கேற்பவே வேலைக்கு அழைக்கப்படுகின்றனர்- என்றார். (ம-44)



கொரோனாத் தொற்றாளர்களுக்கு

## வீடுகளில் வைத்து சிகிச்சை: தென்மராட்சியில் ஆரம்பம்

சாவகச்சேரி, ஓக. 19

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் அன்டிஜென் பரிசோதனையில், கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்படுவோரை வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்கும் செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் கடந்த நான்கு நாள்களாக மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களை மருத்துவமனை விடுதிகளில் வைத்து சிகிச்சையளிப்பதில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மேலதிகமாகவரும் நோயாளர்களை ஏனைய சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்ப ஏற்பாடுகள் மேற்கொண்டபோதும், அனைத்து மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களிலும் தொற்றாளர்கள் சிகிச்சைக்காக நிறைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தொற்றாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தநிலையில், எட்டு மாதங்களான கர்ப்பிணி உட்பட எட்டுப் பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் அவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து கர்ப்பிணி தவிர்ந்த ஏனைய ஏழு தொற்றாளர்களும் அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அங்கு வைத்தே அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-9)

## தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு

கிளிநொச்சி,ஓக.19

தண்ணீர்த் தாங்கியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் மாவடி பகுதியில் உள்ள தண்ணீர்த்தாங்கியில் இருந்து குறித்த சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லையா சிவன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-113.214)

கோத்தா ஆட்சி தொடர்ந்தால்

# ஆப்கானிஸ்தானியர்களைப்போல இலங்கையர்களும் தப்பிச் செல்வர்

### கூட்டமைப்பு எம்.பி. எடுத்துரைப்பு

கொழும்பு, ஓக. 19

இலங்கையில் இந்த ஆட்சி தொடருமாக இருந்தால் ஆப்கானிஸ்தான் காபூல் நகரில் மக்கள் விமானத்தில் ஏறி வெளிநாடுகளுக்குச் செல்வதைப் போன்ற நிலைமை இலங்கையிலும் ஏற்படும். - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது சீட்டுக் கட்டு விளையாடுவதைப் போன்றது. சீட்டுக்கட்டு விளையாடும்போது அதில் உள்ள ஜோக்கர்களை வீசி விட்டே விளையாடுபவர்களிடையே அவை பகிரப்படும்.



தனது அமைச்சை மாற்றப் போவதாகத் தான் அறிந்திருக்கவில்லை என்று முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கூறியுள்ளார். அவருக்கே தெரியாது என்றால் அந்தச் சீட்டுக்கட்டு விளையாட்டைப் போன்றது தான் இதுவும். தற்போது ஆப்கானிஸ்தானின் காபூல் நகரில் இருந்து விமானத்தில் தொங்கிச் செல்லும் மக்கள் அதில் இருந்து விழுகின்றனர். இன்னும் சில காலத்துக்கு இலங்கையில் இவர்கள் ஆட்சி செய்தால் நிச்சயமாக இலங்கை மக்களும் காபூலில் சென்றதைப் போன்று விமானத்தில் செல்லும் நிலைமை ஏற்படும்.

ஒரு காலத்தில் தமிழர்கள் மட்டுமே தஞ்சம் கோரி இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்றனர். ஆனால், இந்த அரசு இப்படியே போகுமாக இருந்தால் எதிர்காலத்தில் விமானம் ஏறி சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்கள் சகலரும் தஞ்சம் கோரி வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலைமை ஏற்படும். அந்தளவுக்கு நாட்டின் நிலைமை உள்ளது- என்றார். (ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த உப்பால் ஆபத்துகள் நேரலாம்

கொழும்பு, ஓக. 19

அதிகளவான உப்பு உட்கொள்ளல் தொற்று நோய்கள் பரவுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டச்சத்து பிரிவின் விசேட நிபுணர் வைத்தியர் ரேணுகா ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் உள்ள மக்கள் அதிகளவு உப்பை உட்கொள்வதைப் பழக்கமாகக் கொண்டுள்ளமை கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

வீட்டு உணவுகளில் அன்றாடம் உப்பை சேர்க்கும்போது குறைவான உப்பைப் பயன்படுத்துவது மிகவும் நல்ல ஆரோக்கிய பழக்கம். அத்துடன் சோறு சமைக்கும்போது ஒரு சிட்டிகை உப்பை சேர்ப்பது தேவையற்றது.

அதேவேளை கருவாட்டிலுள்ள அதிகப்படியான உப்பை நீரில் அரை மணி நேரம் ஊறவைப்பதன் மூலம் அகற்ற முடியும் -என்றார். (ம)

# இலக்கு நோக்கிய பயணத்தால் தலிபான்கள் வெற்றிபெற்றார்கள்

## நாடாளுமன்றில் கூட்டமைப்பு புகழாரம்

கொழும்பு, ஓக. 19

**தலிபான்களின் தொடர் போராட்டமும் கொள்கைப்பிடிப்பும் இலக்கு நோக்கிய பயணமும் அவர்களை இன்று தமது தாய்நாட்டை அடைய வைத்திருக்கின்றது. தலிபான்களின் விடுதலை என்பது சரியா? பிழையா? என்பது பிரச்சினையல்ல. சுதந்திர இயக்கங்களுக்கும் சுதந்திரத்துக்குப் போராடுகின்ற இனங்களுக்கும் தலிபான்களின் விடுதலை ஒரு மாற்றத்தைத் தந்திருக்கின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்ட வரைவு இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாடு மிகப்பெரியதோர் அபாயத்துக்குள் சிக்கியிருக்கின்றது என்று கூறப்படுகின்றது. ஆனால், குருந்தூர்மலையிலே பிக்குகளும் இராணுவத்தினரும் பொலிஸாரும் சென்று விகாரையை அமைக்கின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பொன்னாலையில் சிறிய குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற பிரச்சினைக்காக பொன்னாலை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் சென்று அங்குள்ளவர்களை தாக்கியுள்ளனர். இவ்வாறு தாக்கும் அதிகாரத்தை யார் உங்களுக்கு தந்தது என்று அங்குள்ளவர்கள் கேட்டுள்ளனர். எங்கு பார்த்தாலும் இராணுவம் குவிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் மத்தியில் இராணுவ அச்சம் பிரயோகிக்கப்படுகின்றது.

இந்த நாட்டில் கொரோனா உள்ளது. அதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சரியான நிவாரணம் சென்றடையவில்லை. இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் மீதான விசாரணைகள், நிலப் பறிப்புக்கள், அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் தொடர்ந்தும் நடந்துகொண்டே இருக்கின்றன. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எப்போது முற்றுப்புள்ளி கிடைக்கும்?

நாங்கள் கேட்பது இந்த நாட்டிலுள்ள தமிழர்கள் இந்த மண்ணுக்குரிய தனித்துவமான அடையாளத்துடன் கூடிய தேசிய இனம். 21ஆம் நூற்றாண்டில் தலிபான் இயக்கம் தன்னுடைய நாட்டை ஆயுத வழியில் வென்றுள்ளது. நாங்கள் ஆயுதம் பற்றிப் பேசவில்லை. எமது ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட சூழலில் 12 ஆண்டுகள் கடந்து பேசுகின்றோம். ஆனால், அமெரிக்கா விட்டுச் சென்றதால் தலிபான்கள் ஆப்கானிஸ்தானைப் பிடித்தார்கள், ரஷ்யா விட்டுச் சென்றதால் பிடித்தார்கள் என்பது பிரச்சினையல்ல. அவர்களின் தொடர் போராட்டமும் கொள்கைப்பிடிப்பும் அவர்களின் இலக்கு நோக்கிய பயணமும் அவர்களை இன்று தமது தாய்நாட்டை அடைய வைத்திருக்கின்றது. அந்த நாட்டை அவர்கள் மீட்டெடுத்துள்ளனர்.

நாங்கள் கேட்பது ஆயுத ரீதியான போராட்டத்தையல்ல. ஆனால், நாட்டில் புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கட்டும், பிரதமராக இருக்கட்டும் சிங்களத் தலைவர்களாக இருக்கட்டும். சற்று சிந்தியுங்கள். இன்று உலக ஒழுங்குகள் மாறுகின்றன. உலக சூழல் மாறுகின்றது. எத்தனையோ சுதந்திர இயக்கங்களுக்கும் சுதந்திரத்துக்குப் போராடுகின்ற இனங்களுக்கும் தலிபான்களின் விடுதலை ஒரு மாற்றத்தை தந்திருக்கின்றது. தலிபான்களின் விடுதலை என்பது சரியா? பிழையா? என்பதல்ல. ஆனால், அவர்களால் முடிந்திருக்கின்றது.

ஒரு பெரிய நாட்டை அவர்களால் மீட்டெடுக்க முடிந்திருக்கின்றதெனில் அது ஒரு மாற்றம். இந்த உலகப்பந்தில் ஏற்பட்டிருக்கின்ற இராணுவ ரீதியிலான, ஆயுத ரீதியிலான ஒரு மாற்றம்.

அவர்கள் அந்த நாட்டைப் பிடித்து முதலில் தோற்றுப்போனவர்கள். இரண்டாவது தடவை ஆப்கானிஸ்தானைப் பிடித்துள்ளார்கள்.

இனி அவர்கள் செய்யப் போகின்ற ஆட்சி மக்கள் சார்ந்ததா, மக்களின் நலன் சார்ந்ததா என்பதைக் காலம் தான் தீர்மானிக்க வேண்டும். அவர்களின் நடவடிக்கைகள்தான் தீர்மானிக்கவேண்டும். ஆகவே, உலகப்பந்தில் எந்த இனமும் சுயத்துடன் வாழ்வதற்கான உரிமையை கோரி நிற்பதில் எந்தத் தவறும் இல்லை.

தமிழர்களாகிய நாமும் எங்களது உரிமை தொடர்பில் இப்போதும் ஒரு நிலையான கொள்கையோடு இந்த அரசிடம் நீதி கேட்கின்றோம். தயவு செய்து இந்த அரசியல் கைதிகளையாவது நல்லெண்ண அடிப்படையில் பிணையிலாவது விடுவியுங்கள் -என்றார். (ஒ-22)

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தபால் அலுவலக சேவைகள்

வவுனியா,ஓக.19

கொரோனாத் தொற்றுக் காரணமாக வவுனியா மாவட்ட தலைமை தபால் அலுவலகத்தின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி புதன்,வெள்ளி ஆகிய தினங்களில் தபால் நிலையத்தின் அனைத்து செயற்பாடுகளும் முற்றாக நிறுத்தப்படுவதுடன், ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் அனைத்து செயற்பாடுகளும் வழமைபோல இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே புதன்,வெள்ளி ஆகிய தினங்களில் வவுனியா தலைமை தபால் அலுவலகத்துக்கு பொது மக்கள் வருகைதருவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-110)

### வவுனியா மருத்துவமனையில்

# கடந்த ஒரு மாதத்தில் 184 பேருக்கு சிகிச்சை

## அவர்களில் 50 பேருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டது

வவுனியா, ஓக. 19

வவுனியா மருத்துவமனையில் கடந்த ஒரு வாரத்தில் 184 பேர் கொவிட் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 50 பேருக்கு ஒட்சிசன் தேவைப்பட்டுள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மருத்துவமனையில் கடந்த ஒரு வாரகாலத்தில் நோய் அறிகுறிகளுடன் கூடிய கொரோனா தொற்றாளர்கள் 184 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 50க்கும் மேற்பட்டோர் ஒட்சிசன் தேவையுடையவர்களாகவும் 8 பேர் அதிதீவிர சிகிச்சை தேவைப்படுபவர்களாகவும் இருந்தனர். 6 பேர் சிகிச்சை பயனில்லாமல் உயிரிழந்தனர். தற்போது 70க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-110)

# களிமண் வீதியமைத்து கள்ளமணல் கடத்தல்

## வடமராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமான மணல் அகழ்வு அதிகரித்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

களிமண்ணால் வீதிகள் அமைத்து கள்ள மணல் கடத்தலில் ஈடுபடும் அளவுக்கு இந்தக் கடத்தல்காரர்களின் செயற்பாடுகள் உள்ளன என்று பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஆ.சுரேஸ்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த சில காலமாக வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில், குடாரப்பு பகுதிகளில் சட்டவிரோதமான மணல் அகழ்வு அதிகரித்துள்ளது.

அதனைத் தடுக்க வேண்டியவர்கள் கண்டு கொள்ளாமல் உள்ளனர். நாகர்கோவில் கிராமத்தின் கிழக்குப் பகுதியான குடாரப்பில் சட்ட விரோதமான மணல் அகழ்வில் ஈடுபடுவோர்கள் களிமண்ணால் அவர்களே வீதி அமைத்து நாளாந்தம் பல டிப்பர் மணலைக் கடத்திச் செல்கின்றனர்.

தற்போது களிமண்ணால் வீதியமைத்து மணல் கடத்தலில் ஈடுபடும் அளவுக்கு அவர்களின் மோசடி அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் பல தரப்புக்களிடமும் முறையிட்டும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை - என்றார். (ம-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீதிகளில் சடலங்கள்

கொழும்பு, ஓக. 19

கம்பஹா மாவட்டத்தின் வத்துப்பிடிவல ஆதார மருத்துவமனையின் பிணவறைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக வீதிகளில் சடலங்கள் பாதுகாப்பற்ற முறையில் காணப்படும் சில ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் கொரோனாத் தொற்று தீவிரமாக பரவிவரும் நிலையில், பல மருத்துவமனைகளில் இவ்வாறு இடப்பற்றாக்குறை, ஒட்சிசன் தட்டுப்பாடு, பிணவறைகளில் இடநெருக்கடி போன்ற பல ஒளிப்படங்கள் தொடர்ச்சியாக வெளியாகிய வண்ணம் உள்ளன.

இந்நிலையில், இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவின் ஊடகப்பிரிவு தனது முக நூலில் பதிவிட்டுள்ளது.

ஒளிப்படங்களை பதிவிடுவதற்கு மன்னியுங்கள்; வத்துப்பிடிவல ஆதார மருத்துவமனையின் பிணவறைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக வீதிகளில் சடலங்கள் இவ்வாறு "பாதுகாப்பற்ற முறையில் உள்ளன அதிகாரிகள் கண்காணியுங்கள்" என்றும் பதிவொன்றையும் ஊடகப் பிரிவு பகிர்ந்துள்ளது. (ஒ.இ)

## இலங்கையில்

# 8 நிமிடத்துக்கு ஒருவர் கொரோனாவால் சாவு!

கொழும்பு, ஓக. 19

நாடு முழுவதும் கடந்த 16 நாள்களில் ஆயிரத்து 926 கொரோனா உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையே இந்த எண்ணிக்கைக் காணப்பிக்கின்றது.

கடந்த முதலாம் ஆம் திகதி 63 சாவுகளும், 2ஆம் திகதி 74 சாவுகளும், 3ஆம் திகதி 82 சாவுகளும், 4ஆம் திகதி 94 சாவுகளும், 5ஆம் திகதி 98 சாவுகளும், 6ஆம் திகதி 98 சாவுகளும், 7ஆம் திகதி 94 சாவுகளும், 8ஆம் திகதி 111 சாவுகளும், 9ஆம் திகதி 118 சாவுகளும், 10ஆம் திகதி 124 சாவுகளும், 11ஆம் திகதி 156 சாவுகளும், 12ஆம் திகதி 155 சாவுகளும், 13ஆம் திகதி 160 சாவுகளும், 14ஆம் திகதி 161 சாவுகளும், 15ஆம் திகதி 167 சாவுகளும், 16ஆம் திகதி 171 சாவுகளும் பதிவாகியுள்ளன.

இதற்கமைவாக ஒரு மணித்தியாலத்துக்கு 7 கொரோனா சாவுகள் பதிவாகுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. 8 நிமிடத்துக்கு ஒரு உயிரிழப்புக்கள் பதிவாகின்றன.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஆயிரத்து 482 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

இதேவேளை- 30 - 59 வயதுக்கு உட்பட்ட 430 பேரும், 30 வயதுக்கு குறைந்த 14 பேரும் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 16 நாள்களில் ஆயிரத்து 101 ஆண்களும், 825 பெண்களும் கொரோனாத் தொற்றால் இதுவரை சாவடைந்துள்ளனர். (ஒ.22)

## வவுனியாவில் 101 பேருக்கு கொரோனாத் தொற்று

வவுனியா,ஓக.19

வவுனியா மாவட்டத்தில் மேலும் 101 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் வெளியாகின.

இதனையடுத்து 101 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இந்த நிலையில் தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-18)

## மண்வெட்டியால் மகளை தாக்கி கொலை செய்த தந்தை

கொழும்பு, ஓக. 19

காலி மாவட்டம், வாடுவெலிவிட்டிய பிரதேசத்தில் தனது 33 வயது மகளை மண்வெட்டியால் தாக்கி தந்தை படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ரெஷானி கோன்கஹகே என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் வீட்டுக்கு வந்துள்ள தந்தை, தனது மகளின் தலையில் மண்வெட்டியால் தாக்கியுள்ளார் என்றும் - இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் பத்தேகம மருத்துவமனைக்கு கொண்டுச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் என்றும் - நாகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தினமும் மதுபோதையில் வீட்டுக்கு வந்து வன்முறையில் ஈடுபடுவார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய நபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.22)

## குழந்தையைப் பிரசவித்த தாய் கொரோனாவால் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 19

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் கம்பஹா பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தாய் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தார். இவர் 5 நாள்களுக்கு முன்னரே குழந்தை ஒன்றைப் பிரசவித்திருந்தார்.

33 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று கம்பஹா பொது மருத்துவமனையின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சமன் பதிரண ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த பெண் கடந்த 11ஆம் திகதி பிரசவத்துக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதன்போது அவருக்கு காய்சல், இருமல், தடிமன் இருந்ததால் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் அவரது நிலைமை கவலைக்கிடமாக இருந்ததால் அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு சிசு பிரசவிக்கப்பட்டது.

இந்நிலையில், அவருக்குத் தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் ஐந்து நாள்களுக்குப் பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சிசுவுக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை - என்றார். (ஒ.22)

## தென்மராட்சியில் கடந்த 3 நாள்களில் 5 கர்ப்பிணிகளுக்கு கொவிட் தொற்று

சாவகச்சேரி,ஓக.19

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மூன்று நாள்களில் 5 கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொண்டை நோவு, காய்ச்சல், உடல்சோர்வு, சுவாசப் பிரச்சினைகள் காணப்பட்ட நிலையில் கைதடி, கெற்பேலி, எழுதுமட்டுவாழ் போன்ற இடங்களைச் சேர்ந்த கர்ப்பிணிகள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர்.

இவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து இவர்கள் ஐவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பா



ணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் தெரிவிக்கையில்,

கர்ப்பிணிகள் அடிக்கடி கிளினிக் மற்றும் மகப்பேற்று நிபுணர் போன்றோரிடம் சிகிச்சை பெறச் செல்கின்றனர். அவ்வாறான இடங்களில் தொற்றாளர் ஒருவர் வருகை தரும் பட்சத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தொற்று ஏற்படாமல் தடுப்பதற்கான தடுப்பூசி வந்துள்ள போதிலும் கருவில் உள்ள சிசுவுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் சிலர் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளவில்லை. கர்ப்பிணிகளுக்கென விசேடமாக தயாரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசி வந்துள்ளதால் கர்ப்பிணிகள் தமக்கும் வயிற்றில் உள்ள சிசுவுக்கும் தொற்று ஏற்படாமல் தடுக்க தடுப்பூசி போடுவது மிகவும் பாதுகாப்பானது என்பதால் அச்சமின்றி கர்ப்பிணிகள் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளலாம் - என்றனர். (ஐ-9)

## துணுக்காய் பகுதியில் எறிகணை மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 19



துணுக்காய், வேட்டையடைப்பு பகுதியில் எறிகணை ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை பிரதேச மக்களால் மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.கே.ஞானது சாரவுக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, அந்த எறிகணை மீட்கப்பட்டது. ஆலங்குளம் குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு குறித்த எறிகணை செயலிழக்க வைக்கப்பட்டது. (ம-19)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொவிட் தடுப்பூசி ஏற்றியோரின் விவரங்கள் திரட்டப்படுகின்றன!

**சாவகச்சேரி ஓக. 19**
**யாழ். மாவட்டத்தில் இதுவரை கொரோனாத் தடுப்பூசி ஏற்றியவர்களின் விவரங்கள் மாவட்டச் செயலகத்தால் கோரப்பட்டுள்ளன.**

பல்வேறு காரணங்களால் பலர் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாத நிலையில் தடுப்பூசி ஏற்றியவர்களின் விவரங்கள் மாவட்டச் செயலகத்தால் கோரப்பட்டுள்ளது. இதனால் கிராம அலுவலர்கள் அந்தந்த சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தடுப்பூசி பெற்றவர்களின் விபரங்களைச் சேகரித்து வருகின்றனர்.
இதேவேளை செப்ரெம்பர் மாதம் தொடக்கம் தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டையின்றி வெளியில் நடமாடுவது உள்ளிட்ட எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதால் இதுவரை தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களை உடனடியாக தமது பிரிவு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்ளுமாறு கிராம அலுவலர்கள் அறிவித்துள்ளனர். (ம-9)





## நாட்டை முடக்குங்கள் வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஓக. 19
நாட்டை முடக்குதல், உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா மருத்துவமனையின் தாதிய உத்தியோகத்தர்களால் ஆர்ப்பாட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
வவுனியா மருத்துவமனை வளாகத்தில் மதியம் 12 மணியளவில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கொவிட் பரவலை கட்டுப்படுத்துவதற்கு ஒரு வாரத்துக்கு நாட்டை முழுமையாக முடக்கு, சுகாதார துறை ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து போன்ற வாசகங்கள் எழுதிய பாதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.
ஆர்ப்பாட்டத்தில் தாதிய உத்தியோகத்தர்கள், மற்றும் சுகாதார பணி உதவியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-110)

## படையினரின் தாக்குதலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

*பொன்னாலை மக்கள் கோரிக்கை*

பொன்னாலை, ஓக.19
பொன்னாலை மேற்கில், மக்களின் வீடுகளுக்குள் புகுந்து படையினர் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் தெரிவிக்கையில்,
கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் பொன்னாலை மேற்கு பிரதேசத்துக்குள் பட்டா வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றில் நுழைந்த படையினர் வீதியில் ஒளிர்ந்து கொண்டிருந்த மின்குமிழ்களை அணைத்து விட்டு மக்களை மோசமாக அச்சுறுத்தினர்.
படையினரின் மூர்க்கத்தனமான செயற்பாட்டால் அச்சமடைந்த இளைஞர்கள் ஊரை விட்டு தப்பியோடினர். பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வயல்களுக்குள் தஞ்சமடைந்தனர். சில மணிநேரம் அங்கு பதற்றமான சூழல் நிலவியது.
இந்த நிலையில், வலி.மேற்கு பிரதேச சபையின் பொன்னாலை வட்டார உறுப்பினர் ந.பொன்ராசாவுக்கு பொதுமக்கள் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த அவர் படையினரின் செயற்பாடுகள் தொடர்பாக கேள்வி எழுப்பினார்.
நள்ளிரவு நேரம் மக்களை தாக்கிய படையினரின் செயற்பாடு குறித்து படையினருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட அவர் பொலிஸாருக்கு அழைப்பு எடுத்து அவர்களை சம்பவ இடத்துக்கு வருமாறு அழைத்திருந்தார்.
பொலிஸார் வந்தால் சிக்கல் நிலை உருவாகும் என உணர்ந்த படையினர் உடனடியாகவே அங்கிருந்து வெளியேறினர். பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் வரை ஓடிச்சென்ற படையினர் அங்கு தயாராக நின்ற வாகனத்தில் ஏறி தப்பிச்சென்றனர்.
படையினர் தம்மைத் தாக்கியமை தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவித்திருந்த போதிலும் அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை . பின்னர் 119 இற்கு அறிவித்ததையடுத்து அதிகாலை 2 மணியளவில் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர்.
எனவே பொதுமக்கள் மீது படையினர் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (ஜ-20)



## கிளிநொச்சி சேவை சந்தைக்கு பூட்டு வர்த்தக செயற்பாடுகள் வெளி இடங்களில்

கிளிநொச்சி, ஓக.19
கிளிநொச்சி சேவை சந்தை நேற்று மூடப்பட்டுள்ள நிலையில் வர்த்தக செயற்பாடுகள் வெளி இடங்களில் இடம்பெற்றன.
கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள கிளிநொச்சி சேவை சந்தையில் 500 இற்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்றன.
மாவட்டத்தில் அதி வேகமாக பரவி வரும் கொவிட் பரவல் காரணமாக நேற்று முதல் மறு அறிவித்தல் வரை அனைத்து வர்த்தக செயற்பாடுகளும் கிளிநொச்சி சேவை சந்தையில் இடம்பெறாது என்று கரைச்சி பிரதேச சபையால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கு அமைவாக நேற்றையதினம் சேவை சந்தையின் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டு வெறிச்சோடிக் காணப்பட்டன.
இதேவேளை மீன் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விற்பனை நேற்று வெளி இடங்களில் இடம்பெற்றமையை அவதானிக்க முடிந்தது.
கிளிநொச்சி சேவை சந்தைக்கு நாளாந்தம் வரும் ஆயிரக்கணக்கான மக்கள் அங்காடி சேவையை பெற்றுக்கொள்கின்றனர். இந்த நிலையில் வர்த்தக நிலைய ஊழியர்கள், உரிமையாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் 257 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இந்த நிலையில் மக்கள் அதிகம் நெருங்கும் பகுதிகளை தவிர்க்கும் வகையில் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.
மாவட்டத்தில் கொவிட் பரவலின் அதிகரிப்பு தொடர்பில் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும், கூடுகைகள், தேவையற்ற நடமாட்டங்களை தவிர்த்து பாதுகாப்புடன் செயற்பட வேண்டும் எனவும் சுகாதார தரப்பினர் தொடர்ந்தும் அறிவுறுத்தல் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-113)

## வெடி விபத்தில் தம்பதி காயம்!

### வீட்டில் வைத்து தயாரித்ததால் இந்த நிலை

கொழும்பு, ஓக. 19
அம்பாறை அளிக்கம்பை பிரதேசத்தில் வீட்டில் வெடி தயாரித்த நிலையில், வெடிபொருள் வெடித்து படுகாயமடைந்த நிலையில் தம்பதியினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பன்றிக்கு வெடி வைக்க வீட்டில் வெடி தயாரித்தபோது அது வெடித்துச் சிதறியுள்ளது. அக்கரைப்பற்று, அளிக்கம்பை பிரதேசத்தை சேர்ந்த 65 வயதுடைய குலன் மற்றும் அவரது மனைவியான 62 வயதுடைய [illegible] மேரி என்பவர்களே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர். (ம)

## வெந்த புண்ணில் வேல்

கொழும்பு, ஓக. 19
கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த சிறுமி ஒருவரின் உடலில் வெந்நீர் சிந்தியதால் அவர் ஆனமடுவ ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பத்து வயதான சிறுமி ஒருவரே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சில நாள்களுக்கு முன்னர் சிறுமி மற்றும் அவரது தாயார் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் சுகாதார அறிவுறுத்தல்களின்படி வீட்டில் சிகிச்சை பெற்றுவந்தனர். இந்த நிலையிலேயே மேற்படி அசம்பாவிதம் நேர்ந்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நியூசிலாந்து காட்டும் பாதை!

கொரோனாப் பெருந்தொற்று எவ்வளவு கனதியானது, அதை எவ்வாறு கையாள வேண்டும் என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டை நிகழ்த்தியிருக்கின்றது நியூசிலாந்து. உலக நாடுகளுக்கு ஒரு கற்பிதமாகவும் நியூசிலாந்தின் செயல் அமைந்துள்ளது.


இன்று உலகிலுள்ள அத்தனை நாடுகளுக்கும் இடியப்பச்சிக்கலாக உருவெடுத்துள்ள விடயம் கொரோனாப் பெருந்தொற்று. வறுமைக்குட்பட்ட ஆபிரிக்கத் தேசங்கள் முதல் வல்லரசுகள் வரை அனைத்துக்கும் இந்தப் பெருந்தொற்று பொதுமைப்பாடான விடயமாக அமைந்துவிட்ட போதிலும், கொரோனாவை வெற்றிகொள்ளாத தேசங்கள் இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. அவ்வாறாக கொவிட் பேரலைக்கு இரும்பு அரணாக திகழ்கின்ற நாடுதான் நியூசிலாந்து. நியூசிலாந்தில் கடந்த ஆறு மாதங்களில் ஒரு கொரோனாத் தொற்றாளர்கூட அவதானிக்கப்படவில்லை. இவ்வாறிருக்கையில் கடந்த திங்கட்கிழமை அந்த நாட்டின் பெருநகரான ஆக்லாந்தில் கொவிட் தொற்றாளர் ஒருவர் அடையாளப்படுத்தப்பட்டார். இதையடுத்து ஓர் அதிரடி அறிவிப்பை விடுத்துள்ளார் பிரதமர் ஜசிந்தா. அதாவது ஒரேயொரு தொற்றாளருக்காக ஒட்டுமொத்த நியூசிலாந்தையும் முடக்கியுள்ளார் அவர். இதன்படி நியூசிலாந்து தேசிய அளவில் அடுத்த மூன்று தினங்களும், தொற்றாளர் அடையாளம் காணப்பட்ட ஆக்லாந்து ஒருவாரமும் முடக்கப்பட்டுள்ளது. ஆக, எவ்வாறான நடவடிக்கைகளால் கொவிட் பேரலைக்கு எதிரான அரணாக நியூசிலாந்து உள்ளது என்பதற்குரிய பதிலைத்தான் இந்த நடவடிக்கை மூலம் சொல்லாமல் சொல்லியுள்ளது நியூசிலாந்து.

நியூசிலாந்தில் ஒரேயொரு தொற்றாளருக்காக அந்த நாட்டை முடக்கி உத்தரவிட்ட அதே தினத்தில், இலங்கையில் *3* ஆயிரத்து *555* கொவிட் தொற்றுக்களும் *171* இறப்புக்களும் ஏற்பட்டன. உடனே, இலங்கை சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். 'நாட்டை முடக்குவதால் எவ்விதப் பயனும் இல்லை. இலங்கையில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரேவழி அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதே என்பதாக அமைந்தது அவரின் நிலைப்பாடு.

இலங்கையும் நியூசிலாந்தும் கொவிட் தொற்றைக் கையாள்கின்ற விதம் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாடு என்பதைத்தான் இது புலப்படுத்துகின்றதே தவிர வேறென்ன?.

**கொவிட் பேரலையை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திய நாடு, இவ்வாறான ஓர் ஆகச்சிறந்த முன்னுதாரணத்தை கண்முன் காட்டி நிற்கின்ற போதிலும் 'கெடுகிறேன் பந்தயம்பிடி' என்ற தோரணையில் செயற்படும் எம் ஜாம்பவான்களின் வித்துவத்தனத்தை என்னவென்று சொல்வது.**

''நியூசிலாந்தில் இருக்கக்கூடிய பொருளாதாரமா இங்குள்ளது?. இந்தப் பொது முடக்கத்தால் நியூசிலாந்தின் பொருளாதாரம் அவ்வளவு பின்னடைவைச் சந்திக்காது. ஆனால் இலங்கை?'' என்று பலர் கேள்வி எழுப்பலாம். அவர்களின் கேள்வியில் நியாயம் இல்லாமலில்லை. ஆனால், வெறும் ஒரேயொரு தொற்றாளருக்காகத்தான் நியூசிலாந்து இதைச் செய்துள்ளது என்பதே இதில் கோடிட்டுக் காட்ட வேண்டிய விடயம். தொற்றாளர்கள் குறைந்த நிலையில் இருந்த போது சுகாதாரத்துறை எச்சரித்த நேரத்தில் குறுங்கால முடக்கத்தையாவது அறிவித்திருந்தால் இன்று இலங்கை பிணங்கள் விழும் பூமியாக மாறியிருக்காதே.



# எரிபொருளில் சிக்கனம் அமைச்சர் கோரிக்கை!

**கொழும்பு, ஓக. 19**

**எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துமாறு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் தனது கீச்சகத்தில் பதிவொன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர், அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

நாடு முகங்கொடுத்துள்ள அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு மத்தியில் இவ்வருடத்தின், முதல் 6 மாதங்களில் இறக்குமதி செலவுகளில் 18 சதவீதமானவை எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ளன. இந்தத் தொகையானது வருடத்தின் இறுதி 6 மாதங்களில் 25 சதவீதம் வரையில் உயர்வடையக்கூடும். எனவே, மருந்துப்பொருட்கள் மற்றும் தடுப்பூசிகள் போன்ற அத்தியாவசிய பொருள்களுக்காக ஒதுக்கங்களை மேற்கொள்வதற்காக எரிபொருள் பாவனையை சிக்கனப்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் - என்றுள்ளது. (ம)

# இலங்கைக்கு சீனாவால் ரூ.61.5 பில்லியன் உதவி

கொழும்பு, ஓக. 19

இலங்கைக்கு 61.5 பில்லியன் ரூபா நிதி உதவியை வழங்க சீனா முன்வந்துள்ளது. இலங்கையின் கோரிக்கைக்கு அமைய இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகம் கீச்சகப் பதிவு ஒன்றை மேற்கொண்டு இதனைத் தெரிவித்துள்ளது. இலங்கையின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளாக அந்தப் பதிவில் குறிப்பி டப்பட்டுள்ளது. இலங்கையின் கொவிட் 19 தடுப்பு நடவடிக்கை, பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் நிதி உறுதித்தன்மையைப் பேணுவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது அரசால் நேரடியாக பெறப்பட்ட கடன் என்பதால் கடன் மீள்செலுத்துகை அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தமுடியும் என்று பணம், மூலதனச் சந்தைகள் மற்றும் அரச நிறுவனங்கள் சீர்திருத்தம் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார். (ம,ஆ)

# தடுப்பூசி ஏற்றிய அட்டை இல்லாமல் நடமாடியோருக்கு எச்சரிக்கை

சாவகச்சேரி, ஓக. 19

தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டை வைத்திருக்காது நடமாடும் விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் நேற்று எச்சரிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டையின்றி வியாபாரத்தில் ஈடுபடுவதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸாருடன் இணைந்து பிரிவு ரீதியாக நடமாடும் வியாபாரிகள் மீது பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

கடலுணவுகள் விற்பனையாளர், வர்த்தக நிலையங்களுக்கு பொருள்கள் விநியோகிப்போர் மற்றும் ஐஸ்கிறீம் விற்பனையாளர் ஆகியோர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். .இவர்களில் இரண்டு கட்ட தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டை இன்றி நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தினமும் பிரிவு ரீதியாக பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதால் தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டை இன்றி நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது எனவும் அட்டையின்றி விற்பனைக்கு கொண்டு வரப்படும் பொருள்கள் பறிமுதல் செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## வேல்முருகா

ஆறுமுகம் என்றவுடன் ஆறுதலுண்டு
ஆறுதலுண்டு மனத் தேறுதலுண்டு
தேறும் சிவக்கனலைச் சிந்தனைசெய்தே
செந்தமிழ் முருகனையே
வந்தனை செய்வோம் வேல்முருகா!

கலாபூஷணம்
இ.சரவணபவன்
அராலியூர்
வட்டுக்கோட்டை

கொவிட் தீவிரம்

# கொழும்பு -12 பகுதி கடைகளை மூடவும்

கொழும்பு, ஓக. 19

கொரோனா பரவல் நிலைமை காரணமாக கொழும்பு -12 பகுதியிலுள்ள ஹாட்வெயார் மொத்த விற்பனை நிலையங்களை தற்காலிகமாக மூடுமாறு சிலோன் ஹாட்வெயார் வர்த்தக சம்மேளனம் தனது சங்க உறுப்பினர்களை கேட்டுள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்துள்ள அதன் தலைவர் எஸ்.ரி.எஸ். அருளானந்தன், பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி இந்த தற்காலிக ஏற்பாட்டை செய்யுமாறு அந்த அறிக்கையில் கோரியுள்ளார். (ம)

# இரு வாரங்களாவது முடக்கம் அவசியம்

## ஜனாதிபதி கோத்தாபயவிடம் சஜித் அவசர வேண்டுகோள்

**கொழும்பு, ஓகஸ்ட் 19**

**'நாட்டை இரு வாரங்களுக்கு தற்காலிகமாக முடக்குவதற்கு ஜனாதிபதி கோத்தாபய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தொற்றாளர்களின் எண்ணிக்கையையும், கொரோனா சாவுகளையும் குறைக்கக்கூடியதாக இருக்கும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொவிட்-19 (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டவரைபு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகளின் அடிப்படையில் இலங்கையில் பயங்கரமானதொரு நிலைமை உருவாகக்கூடிய அபாயம் இருக்கின்றது.

நாளொன்றில் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 6 ஆயிரம்வரை அதிகரிக்கக்கூடும் எனவும், நாளாந்த சாவு எண்ணிக்கையும் 220 வரை அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் முதற்கட்டமாக இரு வாரங்களுக்கு நாட்டை முடக்குவதன் ஊடாக தொற்றாளர்களின் எண்ணிக்கையை ஆயிரம் வரையும், சாவு எண்ணிக்கையை 25 வரையும் குறைக்க முடியும் எனவும் உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

இதன்பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் 2022ஆம் ஆண்டில் சாவு எண்ணிக்கை 30 ஆயிரம்வரை உயரும். எனவே, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால் 18 ஆயிரம் சாவுகளை தடுக்ககூடியதாக இருக்கும்.

அத்துடன், நாட்டை இரு வாரங்களுக்கு முடக்குமாறு மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார அதிகாரிகள், சுகாதாரப் பரிசோதகர்கள் என [illegible] கோரிக்கை விடுத்துள்ளனர். இன்று மருத்துவமனை கட்டமைப்பு சீர்குலைந்துள்ளது. தொற்றாளர்கள் நிரம்பிவழிகின்றனர்.

எனவே, சுகாதார கட்டமைப்பு செயலிழந்தால் நிலைமை மோசமாகும். அதனை தடுத்து மக்களின் உயிரை காக்கவே நாட்டை முடக்குமாறு இவர்கள் கோருகின்றனர்.

எனக்கும் கொரோனா தொற்றியது. சாவு பீதியும் வந்தது. மக்களும் இன்று உளரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கர்ப்பிணிப்பெண்கள், சிறார்கள் வைரஸ் தொற்றுக்கு இலக்காகிவருகின்றனர்.

எனவே, நாட்டை 2 வாரங்கள் முடக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றோம். எமது கோரிக்கை ஏற்கப்படாதபட்சத்தில், [illegible] பாதுகாப்பை தாமே உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு மக்களிடம் கோருகின்றோம். -என்றார். (ம-44)

# 15 நாய்கள் படுகொலை

## வலுக்கிறது எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 19

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நீண்டகாலமாக வாழ்ந்த 15 நாய்கள் விஷ ஊசி செலுத்திக் கொல்லப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் விலங்குகள் சட்டத்தின் கீழ் விலங்குகள் உரிமை அமைப்பு, குருந்துவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

மாநாட்டு மண்டபத்தின் பிரதானி ஒருவரால் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா மதிப்புள்ள ஒப்பந்தத்திற்கமைய நாய்களுக்கு விஷம் கொடுத்து கொல்லப்பட்டது என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

நாய்களுக்கு கருத்தடை தடுப்பூசி போடப்பட்டதாக தம்மிடம் தகவல் வழங்கப்பட்டது.

எனினும் அந்த நாய்கள் கொல்லப்பட்டுள்ளன என்று விலங்குகள் உரிமைகள் தொடர்பான குழு தெரிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற அதிகாரிகளுக்கு நடத்தப்பட்ட மாநாடு தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் கரிசனை

**கொழும்பு, ஓக. 19**

**நீதிமன்ற அதிகாரிகளுடன் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் மாநாடு தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பிரதம நீதியரசர் மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் இரண்டு நீதிபதிகளுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.**

அந்த மாநாட்டில் கலந்துரையாடப்பட்டதாகக் கூறப்படும், ஊடகங்களில் வெளியான சில விடயங்கள் இந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவும் தொற்று நிலைமைக்கு மத்தியில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதைக் கட்டுப்படுத்துவதற்கு குற்றவியல் வழக்கின் ஏற்பாடுகளிலுள்ள சரத்துக்களை பயன்படுத்தும் விதம் தொடர்பில் நீதிமன்ற அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குதல், எதிர்ப்புக்களை ஒடுக்குவதற்கு பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு அழுத்தம் விடுக்க முயற்சிக்கப்பட்டதாக, நீதிமன்ற அதிகாரிகளிடையே நிலைப்பாடொன்றை ஏற்படுத்தல் ஆகிய விடயங்களுக்காக இந்த மாநாடு நடத்தப்பட்டதாகக் கூறப்படுவதாக கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின்போது, வழக்கின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, வேறு விடயங்களை ஆராய்வதிலிருந்து சுதந்திரமாக நீதிமன்ற அதிகாரிகள் செயற்படுகின்றார்கள் என்ற நம்பிக்கை வழக்குத் தொடுநர்களுக்கும் அவர்களின் சட்டத்தரணிகளுக்கும் காணப்படல் வேண்டும். இந்த விடயம், நீதிமன்ற சுயாதீனம் மற்றும் சட்டவாட்சியின் அடிப்படையாகும் என்ற புரிதல் நீதிபதிகளுக்கு உள்ளதென கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதியை நிலைநாட்டுவது மாத்திரமன்றி, நிலைநாட்டப்படும் என காண்பிக்க வேண்டியதும் அவசியமானது என்ற நிலைப்பாட்டுக்கு, தற்போது வெளியாகும் விடயங்கள் முரணானவை என சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த மாநாட்டின் மூலம், நீதிமன்ற விடயங்களை நிறைவேற்றுகையில், அதனை முன்னெடுக்க வேண்டிய விதம் தொடர்பில் அழுத்தம் அல்லது நீதிமன்றம் சார்ந்த எண்ணம் மற்றும் விருப்பத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் எண்ணம் ஏதேனும் உள்ளதென்று நீதிபதிகள் அல்லது பொதுமக்களின் மனங்களில் தோன்றக்கூடாது என சட்டத்தரணிகள் சங்கத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் சட்டக்கோட்பாடு இல்லாமற்போனால், இந்த நிறுவனங்கள் சுயாதீனமானவை என்ற நிலைப்பாடு குறைவடையும் அல்லது அற்றுப்போகும் என சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஓ.இ)

# ரூபா மதிப்பைக் குறைக்குமாறு வங்கிகளை கோரவில்லை

*மத்திய வங்கி தெளிவுபடுத்தல்*

கொழும்பு, ஓக. 19

உடனடியாகச் செயற்படும் விதத்தில் இலங்கை ரூபாவை மதிப்புக் குறைக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகள் உத்தியோகபூர்வமாகக் கோரப்பட்டுள்ளன என்ற செய்திகள் பரப்பப்பட்டு வருவதை இலங்கை மத்திய வங்கி அவதானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அத்தகைய செய்திகள் எவ்விதத்திலேனும் அடிப்படையற்றவை என்று பொதுமக்களுக்கு அறிவித்துள்ளதுடன் செலாவணி வீதத்தை நிர்ணயிப்பதன் மீதான இலங்கை மத்திய வங்கியின் நிலைக்கு அல்லது தொழிற்பாட்டு ரீதியான ஏற்பாடுகளுக்கு இலங்கை மத்திய வங்கி எந்தவித மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் வழமையான ஊடகங்கள் ஊடாகவும் பரப்பப்பட்டு வருகின்ற தவறான தகவல்களை நம்பவேண்டாம் எனவும் பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுக்கும் ஏதேனும் உத்தியோகபூர்வ அறிக்கை, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், துணை ஆளுநர் அல்லது பெயர் மற்றும் பதவி மூலம் அடையாளப்படுத்தப்படுகின்ற இலங்கை மத்திய வங்கியின் எவரேனும் வேறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மூலமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.இ)



# வர்த்தக நிலையத்தில் தீ

யாழ்ப்பாணம், ஓக.19

தனியார் வர்த்தக நிலையம் ஒன்றில் தீப் பரவல் ஏற்பட்டுள்ளது.யாழ்ப்பாணம் சிவன் கோயிலுக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலே இந்த தீப் பரவல் நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்பு பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. குறித்த தீ விபத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது.தீ விபத்து தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-319,20)

## வானொலி மூத்த அறிவிப்பாளர் ஜோக்கிம் பெர்னாண்டோ காலமானார்

கொழும்பு, ஓக. 19

மூத்த வானொலி அறிவிப்பாளரும் நாடகக் கலைஞருமான ஜோக்கிம் பெர்னாண்டோ தனது 81 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார். கொழும்பு - 13, ஜம்பட்டா வீதியிலுள்ள அவரது வீட்டில் காலமானரென உறவினர்கள் தெரிவித்தனர்.

இலங்கை வானொலி சேவையில் பகுதி நேர அறிவிப்பாளராக அறிமுகமாகிய அவர், பின்னர் முழு நேர அறிவிப்பாளராக செயற்பட்டார். செய்தி வாசிப்பாளர், அறிவிப்பாளர், நாடகக் கலைஞர், ஊடகவியலாளர் என ஊடகத்துறையில் பல பிரிவுகளிலும் ஜோக்கிம் பெர்னாண்டோ கடமையாற்றியுள்ளார். (ஓ.இ)

## பிரசவ வேதனையுடன் சேர்க்கப்பட்ட கர்ப்பிணித் தாய்க்கு கொரோனா



சாவகச்சேரி,ஓக.19

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பிரசவ வேதனையுடன் சேர்க்கப்பட்ட கர்ப்பிணித் தாய்க்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொடிகாமம் கெற்பேலியைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்க்கு பிரசவ வேதனை ஏற்பட்டது. இதனையடுத்து இவரை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்த்த னர்.மருத்துவமனையின் பிரசவ விடுதி கொரோனா விடுதியாக மாற்றப்பட்டதால் பிரசவ வேதனையில் துடித்த கர்ப்பிணித் தாயை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்ப முன்னர் மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இதேவேளை- கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த எட்டு மாதக் குழந்தை ஒன்றுக்கு வலிப்பு ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர்.இதனையடுத்து குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து குழந்தையையும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். (ஜ-9)

# கொரோனா வைரஸ் பரவல் நான்காம் கட்டத்தை அடைந்துள்ளது

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இணைப்பாளர் உமாசுதன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,ஓக.19

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வகைப்படுத்தலின்படி எமது நாடு கொரோனா வைரஸ் பரவலில் நான்காம் கட்டத்தை அடைந்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் உமாசுதன் தெரிவித்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக் கிளையின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் போதனா மருத்துவமனையில் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து இலங்கையானது கொரோனாத் தொற்றுக்கு முகம் கொடுத்து வருகின்றது. அன்றிலிருந்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மக்களுக்கான அறிவுறுத்தல்களையும் விழிப்புணர்வையும் காலத்துக்கு காலம் வழங்கி வருகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வகைப்படுத்தலின்படி எமது நாடு கொரோனா வைரஸ் பரவலில் நான்காம் கட்டத்தை அடைந்துள்ளது.

இதிலிருந்து மீண்டுவர சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்ற வேண்டும்.டெல்டா திரிபு வைரஸ் பரவலிலும் அபாயக் கட்டத்தை எமது நாடு அடைந்திருக்கிறது.

சுகாதார அமைச்சின் தகவலின் படி இதுவரை 14.5 வீதமானவர்கள் இரண்டு டோஸையும் 11.5 வீதமானவர்கள் ஒரு டோஸையும் பெற்றுள்ளனர்.18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 70 வீதமான இரண்டு டோஸைப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே நாங்கள் இந்த நோய் வீரியத்திலிருந்து விடுபட முடியுமென முற்றுமுழுதாக நம்புகிறோம் - என்றார். (ஜ-26)

## கொரோனா விடுதியிலிருந்து தப்பியோடிய இளைஞன்

சாவகச்சேரி,ஓக.19

கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்ட கோப்பாயைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் இளைஞருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவர் மருத்துவமனையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டார்.விடுதியில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில், விடுதியிலிருந்து எவருக்கும் தெரியாமல் வெளியேறி, மருத்துவமனையின் பின்கதவு ஊடாக தப்பிச் சென்றுள்ளார்.

இவரது விவரம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயுவுக்கு கடும் தட்டுப்பாடு இணையத்தில் விறகு விற்பனை

கொழும்பு, ஓக. 19

நாட்டில் சமையல் எரிவாயுவுக்குக் காணப்படும் தட்டுப்பாடு காரணமாக இணைய வழியாக விறகு விற்பனை செய்யப்படுகின்றது.



இணைய வழியாக மளிகைப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்களை விற்பனை செய்யும் பிரபல நிறுவனமொன்று இவ்வாறு விறகு விற்பனையில் ஈடுபட்டுள்ளது.

ஒரு கட்டு விறகு (5 கிலோகிராம்) 140 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இணையவழியில் விறகை விற்பனை செய்வோம் என்று நாம் ஒருபோதும் கற்பனை செய்து பார்த்ததில்லை. ஆனால், அது மிகவும் விரைவாக விற்பனையாகிறது" என்று இணையவழியில் விறகை விற்பனை செய்யும் நிறுவனத்தின் நிறுவுனரும் தலைவருமான துலித் ஹேரத் முகநூலில் பதிவிட்டுள்ளார். (ம-ஆ)

# நாடாளுமன்றில் உரையாற்ற ரிஷாத்துக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஓக. 19

நாடாளுமன்றில் உரையாற்றுவதற்கு ரிஷாத் பதியுதீனுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தனக்கெதிராக மேற்கொண்டுவரும் விசாரணை தொடர்பாக சபையில் கருத்துத் தெரிவிக்க முற்பட்ட வேளையிலேயே ஆளும் தரப்பினர் வெளிப்படுத்திய எதிர்ப்பால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான தற்காலிக ஏற்பாடுகள் தொடர்பான சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ரிஷாத் பதியுதீன், எந்த குற்றச்சாட்டும் இல்லாமல் நான் கடந்த 116 நாள்களாக தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றேன். இதுதொடர்பாக ஜனாதிபதி சபையில் இருக்கும்போது நான் தெரிவித்த பின்னர் விரைவாக என்னை கோட்டை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி, தற்போது சிறையில் அடைத்திருக்கின்றார்கள். அத்துடன் எனது வீட்டில் பணிபுரிந்து வந்த ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சோடித்து தெரிவிக்கப்பட்டதால் தற்போது எனது மனைவி, மனைவியின் தாய், தந்தை மற்றும் சகோதரன் சிறையில் இருக்கின்றார்கள். எனது மைத்துனர், 5 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் பாலியல் குற்றச்சாட்டொன்றுக்காக சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார். இது தொடர்பான விசாரணை மேற்கொள்ள மாத்தறை பொலிஸ் அதிகாரியான வருணி போகாவத்த என்பவரை நியமித்திருக்கின்றார்கள் என்றார்.

இதன்போது எழுந்த சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, நீதிமன்றில் விசாரிக்கப்பட்டுவரும் விடயங்களை சபையில் தெரிவிக்கவேண்டாம். நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் செயற்படவேண்டும் என்றார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த ஆளும் கட்சி பிரதம கொறடா, நீதிமன்றில் தெரிவிக்கவேண்டிய விடயங்களை சபையில் தெரிவிப்பதற்கு இடமளிக்க முடியாது. செய்வதெல்லாம் செய்துவிட்டு நிரபராதிபோல் இங்கு கருத்து தெரிவிக்கின்றார். இதற்கு இடமளிக்கக் கூடாது என்றார்.

இதனைத்தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. பி அறிக்கை மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. பி அறிக்கை தொடர்பாக சபையில் கதைக்க முடியும். இதற்கு முன்னாள் சபாநாயகர்கள் இடமளித்திருக்கின்றார்கள். அதனால் அவரது நியாயத்தை தெரிவிப்பதற்கு இடமளிக்கவேண்டும் என்றார்.

எனினும் ஆளும் தரப்பினர் கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்ததை அடுத்து ரிஷாத் தொடர்ந்து உரையாற்ற இடமளிக்கவில்லை. (ம)

# விபத்தில் பெண் பலி

கொழும்பு, ஓக. 19

தனமல்வில் எம்பிலிபிட்டிய பிரதான வீதியின் செவனகல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நபர் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி உள்ளார்.

எம்பிலிபிட்டியவில் இருந்து தனமல்வில நோக்கி பயணித்த கெப் ரக வாகனம் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 56 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் கெப் ரக வாகனத்தின் ஓட்டுநர் பலத்த காயமடைந்துள்ளார். (ம)

# பாடசாலைகளில் மாணவர்களை அழைத்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபட முற்றாகத் தடை

முல்லைத்தீவு, ஓக.19



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களை அழைத்து கற்றல் வகுப்புக்களை நடத்துவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு கோட்டத்தில் சில பாடசாலைகளில் மாணவர்களை அழைத்து கற்றல் வகுப்பு க்கள் நடத்தப்படுவதாக பெற்றோரால் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு முறையிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கொவிட்-19 தொற்று அதிகரித்து காணப்படுவதால் பாடசாலைகளில் கற்றல் வகுப்புக்களை நடத்துவது கொவிட் 19 தொற்றை அதிகப்படுத்தலாம்.

எனவே வகுப்புக்களை உடன் நிறுத்திவைக்குமாறும் இது தொடர்பில் அதிபர்களுக்கு அறிவுறுத்துமாறும் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரிக்கு சுகாதார மருத்துவ அதிகாரி எழுத்து மூலம் அறிவித்துள்ளார். (ஐ-19)

# பெருமளவு மருத்துவ உபகரணங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு

கொழும்பு, ஓக. 19

விக்டோரியா, தெற்கு மற்றும் மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கை சமூக சங்கங்கள் மற்றும் நலன் விரும்பிகளால் இரண்டு தொன் மருத்துவ உபகரணங்கள் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மெல்போர்னில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம், சிறப்பு விமானங்கள் மூலமாக இந்த மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த கடினமான காலங்களில் இலங்கையில் விலைமதிப்பற்ற உயிர்களை காப்பாற்ற உதவுவதற்கு சரியான நேரத்தில் நன்கொடை வழங்கிய அனைத்து சங்கங்கள் மற்றும் நலன்விரும்பிகளுக்கும் மெல்போர்னில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் நன்றிகளை தெரிவித்துள்ளது. (ம)

# கொவிட் விதிமீறல் 284 பேர் கைது

கொழும்பு, ஓக. 19

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 284 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரை மேல் மாகாணத்தின் 12 நுழைவுப் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். 859 வாகனங்கள் 12 சாலைத் தடுப்புகளில் ஆய்வு செய்யப்பட்டன. 199 வாகனங்கள் சரியான காரணமின்றி எல்லைகளைக் கடந்து செல்ல முயன்றதால் திருப்பி அனுப்பப்பட்டன. கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் இந்தக் குற்றத்துக்காக 55 ஆயிரத்து 173 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

# இலங்கைக்கு 50மில்.டொலர் வழங்குகின்றது பங்களாதேஷ்

கொழும்பு, ஓக. 19

அந்நிய செலாவணி நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு ஆதரவளிக்கும் பங்களாதேஷின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த வாரம் பங்களாதேஷ் இலங்கைக்கு 50 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் பங்களாதேஷிடம் இருந்து கடனுதவி பெறும் முதலாவது நாடாக இலங்கை பதிவானது.

பங்களாதேஷ் வங்கிக்கும், இலங்கை மத்திய வங்கிக்கும் இடையில் கடந்த 3ஆம் திகதி கையொப்பமான ஒப்பந்தத்தின் மீதான நடவடிக்கையாகவே இந்தக் கடன் இலங்கைக்கு வழங்கப்படுகின்றது.

இலங்கையில் வேகமாக குறைந்து வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மற்றும் அதன் மாற்று விகிதத்தில் அழுத்தத்தை எளிதாக்குவதையும் இந்த கடன் தொகை நோக்காகக் கொண்டது.

கடன்தொகை மூன்று கட்டங்களாக வழங்கப்படவுள்ளது.

இதன்படி இன்னும் 200 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது. (ம)

# ரிஷாத் தொடர்ந்து விளக்கமறியலில்

கொழும்பு, ஓக. 19

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அவரை எதிர்வரும் முதலாம் திகதி வரை யில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொரோனாவின் வெறியாட்டம் ஒருபுறம் இராணுவத்தின் வெறியாட்டம் மறுபுறம்

## யாழ்ப்பாணத்தில் இந்த நிலையென கஜேந்திரன் எம்.பி. மன்றில் முழக்கம்

கொழும்பு, ஓக. 19

**கொரோனாவின் வெறியாட்டம் ஒரு புறம் நடக்கும்போது யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் வெறியாட்டமும் நடக்கின்றது. இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொரோனா வைரஸ் தொற்று தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா வெறியாட்டம் பயங்கரமாக இடம்பெறுகின்றது. மக்கள் செத்து மடிந்து கொண்டிருக்கின்றனர். அதேவேளை, வடக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள பொன்னாலை என்ற கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 2 மணியளவில் இராணுவத்தினர் நுழைந்து ஆண், பெண், வயது வேறுபாடின்றி கண் மூடித்தனமாக தாக்கியுள்ளனர். இது ஓர் இராணுவ வெறியாட்டம். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதேவேளை, கொரோனா உக்கிரமடைந்துள்ள நிலையில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளைப் பிணைகளிலாவது விடுவிக்குமாறு கோருகின்றோம். கொரோனாத் தொற்று காரணமாக அவர்களை உறவினர்கள் சென்று பார்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்களை அவர்களின் சொந்த மாவட்ட சிறைகளுக்கு மாற்றவும் மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் கைதிகளும் அவர்களின் உறவினர்களும் உள ரீதியாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுக்குப் பிணை வழங்குங்கள்.

அடுத்ததாக, இலங்கைக்கு ஒட்சிசன் கொண்டு வருவதற்காக கப்பல் ஒன்று இந்தியா சென்றுள்ளது எனக் கூறப்படுகின்றது. இதேவேளை, யாழ். வைத்தியசாலையில் ஒட்சிசன் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் எனக் கோருகின்றேன்.

கொரோனா விடயத்தில் இராணுவத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை சுகாதாரத் துறையினருக்குக் கொடுங்கள். கொரோனாத் தடுப்பு செயலணியைத் தொடர்ந்தும் இராணுவம் வைத்திருக்குமேயானால் கொரோனாவை ஒருபோதுமே ஒழிக்க முடியாது. அமைச்சர்களை மாற்றினாலும் பயன் ஏற்படாது.

இதேவேளை, கொரோனாவால் பாதிக்கப்பட்டு இறப்போரின் உடல்களை எரிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் இடமே உள்ளது. அங்கும் ஒரு நாளைக்கு 3 உடல்களை மட்டுமே எரிக்க முடியும். அதனை நான்காக மாற்ற முயற்சிக்கப்படுகின்றது. இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் 10 உடல்கள் வரை தேங்கியுள்ளன. அவற்றை எரிக்க வவுனியாவுக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது மிகவும் சிரமமானது. மத ரீதியான சடங்குகளைச் செய்வதில் சிக்கல்களை ஏற்படுத்தும்.

எனவே, அந்தந்த மாவட்டங்களிலேயே கொரோனா உடல்களை எரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அத்துடன் கொரோனா உடல்களை விறகுகள் மூலமும் எரிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்' என்றார். (ம-22)

## நாடாளுமன்ற ஊழியர்கள் 12 பேருக்குக் கொரோனா

கொழும்பு, ஓக. 19

நாடாளுமன்ற ஊழியர்கள் 12 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று 275 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட எழுமாறான கொரோனா பரிசோதனைகளில் இது கண்டறியப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அவர்களது ஊழியர்கள் மற்றும் நாடாளுமன்ற ஊழியர்கள் ஆகியோர் கொரோனாப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இந்தச் சோதனைகள் நேற்றுமுன்தினம் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடத்தப்பட்டது.


இதனிடையே தொற்று உறுதியானவர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களையும் பாதுகாப்பு கமரா மூலம் அடையாளம் கண்டு அவர்களையும் தனிமைப்படுத்தவும், சம்பந்தப்பட்ட பகுதிகளை கிருமி நீக்கம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்று முதல் மறு அறிவித்தல் வரை குறைந்தபட்ச ஊழியர்களுடன் நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது' -என்றார். (ம-22)

## ஓக.31ஆம் திகதிவரை அசாத் சாலிக்கு மறியல்

கொழும்பு, ஓக. 19

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அசாத் சாலி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவால் ஐந்து மாதங்களுக்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்தமையையடுத்து, மார்ச் 16ஆம் திகதி அசாத் சாலி கைது செய்யப்பட்டார். அவர் தற்போது சிறைப் பாதுகாப்புடன் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## விளையாட்டரங்கங்களையும் தனியார் மயப்படுத்தும் அரசு

கொழும்பு, ஓக. 19

விளையாட்டரங்குகளை தனியாருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

விளையாட்டு அமைச்சின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விளையாட்டரங்கங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்ப டும் விளையாட்டரங்கங்கள் என்பனவே இவ்வாறு குத்தகைக்கு விடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் சுகததாச மற்றும் கேத்தாரம உள்ளரங்கங்கள் உள்பட பல விளையாட்டு அரங்கங்கள் உள்ளன.

அதேபோன்று பிராந்திய மற்றும் மாவட்ட அரங்கங்களும் உள்ளன.

இந்த அரங்கங்களின் பராமரிப்புக்காக விளை யாட்டுத்துறை அமைச்சு ஆண்டுதோறும் அதிக அளவு நிதியைச் செலவு செய்யவேண்டியிருப்பதால், இலாப மீட்டுவதற்காக தனியார் - அரசு கூட்டு முகாமையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. (ஒ.5)




## பிரதேச செயலருக்கு கொவிட் தொற்று

வவுனியா,ஓக.19

வவுனியா வடக்கு பிரதேச செயலர் இ.பிரதாபன் மற்றும் அங்கு பணிபுரியும் 3 உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் நால்வருக்கும் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டதுடன், பிரதேச செயலகத்தில் பணிபுரியும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ-110)

நல்லூர் உற்சவம்

# வீதித் தடைகளுக்கு உள்ளேயுள்ள கடைகளுக்குச் செல்ல அனுமதி!

## விசேட வழிபாட்டு நேரங்களில் தடை தொடரும்

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் உற்சவம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் வீதித் தடைகளுக்கு உள்ளே இருக்கும் கடைகளுக்குச் செல்வதற்கு நிபந்தனையுடன் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி விசேட வழிபாட்டு நேரங்களான அதிகாலை 4.00 தொடக்கம் 5.30, காலை 10.00 தொடக்கம் 12.00, மாலை 4.00 தொடக்கம் 6.00 ஆகிய நேரங்களில் அவ்வாறு கடைகளுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சுகாதார நிலைமைகளின் அடிப்படையிலும் சுகாதார மருத்துவ அதிகாரியின் மேலதிக பணிப்பின் அடிப்படையிலும் இந்த நடைமுறைகளில் தேவையேற்படின் மாற்றம் வரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யோகிபாபு நடிக்கும் 'வீரப்பனின் கஜானா'




நடிகர் யோகி பாபு கதாநாயகனாக 'வீரப்பனின் கஜானா' என்ற புதிய படத்தில் நடித்து வருகிறார். கடைசியாக அவர் நடித்த 'மண்டேலா' படம் ஓடிடியில் வெளியாகி வெற்றிபெற்றது. அதையடுத்து இப்போது 'வீரப்பனின் கஜானா' என்ற படத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் யாசின் இயக்குகிறார்.

சந்தன கடத்தல் வீரப்பன் காட்டுக்குள் பல இடங்களில் பணத்தையும், யானைத் தந்தத்தையும், தங்கத்தையும் ஆங்காங்கே புதைத்து வைத்திருப்பதாக கூறப்படுகிறது.

அந்த புதையலை தேடிச் செல்லும் ஒரு குழுவின் கதையாக உருவாகி வருகிறது வீரப்பனின் கஜானா என்ற படம்.

நகைச்சுவை திரில்லர் பாணியில் உருவாகும் இந்தப் படத்தில் யோகிபாபு புதையலை தேடும் குழுவின் தலைவராக நடிக்கிறார் எனக் கூறப்படுகிறது.

மேலும் மொட்டை ராஜேந்திரன், ராஜேஷ், பூஜா, தேவா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகின்றனர்.

# மகள்களைப் பெற்ற அப்பாக்களுக்கு...

பெண்கள் உலகின் முதல் ஹீரோ அவர்களது தந்தைதான். உலகத்தில் எந்த மொழியில் அல்லது எந்த இனத்தில் இருந்தாலும் அப்பாக்களுக்கு எப்போதுமே தங்கள் மகள் தான் தங்கமீன்.

வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் தனது மனைவி மீதான அன்பை விட பலமடங்கு தனது மகள் மேல் கொண்டிருப்பார்கள் அப்பாக்கள்.

மகள்கள் தங்களது அப்பாவை, அம்மாவை விட அதிகம் விரும்ப என்ன காரணங்கள் இருக்கிறது.

1. தங்களது வாழ்நாளில் நீண்ட நாட்களாக கண்ட நேர்மையான தோழன் தங்களது தந்தை தான் என பெண்கள் எண்ணுகிறார்கள். பெண்கள் தங்களது வாழ்நாளில் அதிக நேரம் செலவழிப்பதும் அவர்களது தந்தையுடன் தான்.
2. பிறந்த முதல் நாளில் இருந்து வளரும் ஒவ்வொரு நாளும், உலகை கற்றுத்தரும் ஆசான் தந்தை தான். இது மகன்களுக்கும் கிடைக்கும் வாய்ப்பு தான். ஆனால், பெண்களுக்கு வாழ்நாள் முழுதும் கிடைக்கும் பரிசு இது.
3. வீட்டில் சகோதரன் வாங்கிய அடியை, எந்த மகளும் எப்போதும் வாங்கியது இல்லை. முடியாது என்ற வார்த்தையே இல்லை மகள்கள் கேட்கும் எந்த விஷயத்திற்கும் அப்பாக்கள், "முடியாது.." என்ற வார்த்தைகளை பிரயோகம் செய்வதில்லை.
4. வெளியிடங்களுக்கு சென்று தாமதமானால், அது எந்நேரமாக இருந்தாலும், கால்கடுக்க காத்திருந்து அழைத்துவரும் காவலன் அப்பா.
5. காதலை புரிய வைத்தவர் காதல் என்றால் என்ன, பருவத்தில் வரும் ஆசைகளும், மோகமும் என்ன, மெய்தனை எப்படி உணர்வது என மகளுக்குள் காதலை புரிய வைப்பவர் அப்பா. ஒவ்வொரு மகள்களின் முதல் காதலன் அப்பா தான்.
6. தங்களுக்கு என்ன மோசமான சூழ்நிலை வந்தாலும், ஏற்பட்டாலும் அதிலிருந்து மீட்டு வரும் சூப்பர் ஹீரோ அப்பா தான். தைரியம் ஊட்டும் அம்மா என்னதான் அம்மா பாலூட்டினாலும், பெண்களுக்குள் தைரியத்தை ஊட்டுவது அப்பாக்கள் தான்.

ஒரு மகளின் வாழ்க்கையில் அப்பா என்பவர் ஓர் உறவு அல்ல, தோழன், காதலன், ஹீரோ, காவலன் என எண்ணற்ற பாத்திரங்களை தாங்கிக் கொண்டிருப்பவர் தான் அப்பா. ஆதலால்தான் பெண்கள் தங்களது தந்தையை அதிகமாக நேசிக்கிறார்கள்.



புதிரானவள்@

மன அழுத்தத்தில்
இருப்போரின்
கைகளைப் பற்றுவதே..
மிகச்சிறந்த
முதலுதவி..!

கடைநிலை ஊழியன்@


முயற்சி செய்வது
சுலபமும் இல்லை !!
குறை சொல்வது
கடினமும் இல்லை !!



கடைநிலை ஊழியன்@

என்னை தாக்கும்
தலிபானாக நீ!

சிக்கித் தவிக்கும்
காபூலாக நம்
காதல்!!















# இன்றைய நாள்

**மேடம்**: நன்மை ஏற்படும். பணவரவு இருக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வருகையால் விரும்பத்தக்க சம்பவம் ஒன்று நிகழும். பயணம் செல்ல வேண்டி வரலாம். செலவும் அதிகரிக்கும்.

**இடபம்**: விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டி வரலாம். கோபத்தைக் கட்டுப்படுத்துவது நல்லது. கலகலப்பான நாள். லாபம் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும்.

**மிதுனம்**: உடல் ஆரோக்கியம் மேம்படும். அமைதி காப்பது நல்லது. நண்பர்களால் மனம் மகிழும்படியான சூழ்நிலை உருவாகும். செலவு அதிகரிக்கலாம். இளைஞர்கள் கூடுதல் நன்மை அடைவர்.

**கடகம்**: தந்திரத்தால் பகையை முறியடிக்க முயல வேண்டாம். எதை யும் செய்து முடிக்கலாம் என்ற நம்பிக்கை உண்டாகும். முயற்சிகளில் ஓர ளவே சாதகமான பலன் கிடைக்கும்.

**சிம்மம்**: வீண் குழப்பம் அகலும். விரும்பிய பொருள் கைகூடும். முயற்சிகள் வெற்றிப்பாதையில் செல்லும். நற்செய்தி ஒன்று வரும். மந்த கதியில் இருந்த தொழில், வியாபாரம் சூடுபிடிக்கும்.

**கன்னி**: நிம்மதிக்கும் வாழ்க்கை வசதிக்கும் குறைவு இருக்காது. முன்னேற்றத்திற்கான முயற்சிகளை இன்று எடுப்பது நல்லது. பணியிடத்தில் மரியாதை கூடும். கலகலப்பான நாள்.

**துலாம்**: குடும்பத்தினருடன் கோபமாக பேச வேண்டாம். குடும்பச் செலவு சற்று கூடும். பெண்களுக்கு நன்மையான நாள். எதையும் செய்து முடிக்கும் துணிச்சல் உண்டாகும்.

**விருச்சிகம்**: குடும்ப நலத்திற்காக எடுக்கும் முயற்சி வெற்றி பெறும். சஞ்சலமடைவதை விட்டு விட்டு திட சிந்தனையுடன் செயல்படுங்கள். நினைத்ததை முடிக்க முடியும்.

**தனுசு**: தன்னம்பிக்கை அதிகரிக்கும். திறமையுடன் சுறுசுறுப்பு கூடும். சிறு வெற்றி பெறுவீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும் மனமகிழ்ச்சி உண்டாகும். குழப்பம் நீங்கித் தெளிவு ஏற்படும்.

**மகரம்**: முயற்சியில் இருந்த தடைகள் அனைத்தும் விலகும். உங்களின் உடைமைகளை கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். குடும்ப விவகாரங்களில் முன்னேற்றம் காணப்படும்.

**கும்பம்**: இன்று புதிய செயல்களை செய்ய திட்டமிடுவீர்கள். பணியாளர்கள் சிறப்பாக செயல்பட்டு திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

**மீனம்**: இது வரை இருந்த கவலை நீங்கித் தெளிவு உண்டாகும். சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிகம் பாடுபடுவீர்கள். முயற்சிகள் வெற்றியை தர கூடுதல் நேரம் ஒதுக்க வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹசாரா சமூகத் தலைவர் மஸாரியின் சிலை தகர்ப்பு

## பெண் ஆளுநரும் கடத்தல் தலிபான்கள் வெறியாட்டம்




**காபூல், ஓக. 19**

**ஆப்கானிஸ்தானின் பாமியான் நகரில் அமைக்கப்பட்டுள்ள ஹசாரா சமூகத்தின் தலைவர் அப்துல் அலி மஸாரியின் சிலையை வெடிவைத்து தலிபான்கள் தகர்த்துள்ளனர்.**

கடந்த முறை ஆப்கானைக் கைப்பற்றியபோது, பாமியானில் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த, நூற்றாண்டுகள் பழமையான புத்தர் சிலைகளை வெடிவைத்து தலிபான்கள் தகர்த்து அழித்தனர்.

இந்த முறை ஆட்சிக்கு வருவதற்கு முன்பே ஹசாரா இனத்தின் தலைவரின் சிலையை தலிபான்கள் தகர்த்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் மலைப்பகுதியில் வாழும் இனத்தவர்கள் ஹசாராக்கள் அல்லது ஹசாராஜத் என்று அழைக்கப்படுகின்றனர். 13ஆம் நூற்றாண்டில் மங்கோலிய வம்சத்தை உருவாக்கிய செங்கிஸ்கான் வழித்தோன்றல்கள் ஹசாராக்கள் என்று வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன.

இந்த ஹசாரா இனத்தின் தலைவராக இருந்த அப்துல் அலி மஸாரி கடந்த 1995ஆம் ஆண்டில் தலிபான்களால் தூக்கிலிடப்பட்டார். இதன் பின்னர் அப்துல் அலியின் மிகப்பெரிய சிலை பாமியான் நகரில் மக்களால் நிறுவப்பட்டது. ஹசாரா இனத்தவரின் மீதான வெறுப்பால், ஹசாரா இன மக்களை தொடர்ந்து தலிபான்கள் துன்புறுத்தி வந்தனர். இதன் தொடர்ச்சியாக தற்போது மஸாரியின் சிலை தலிபான்களால் தகர்க்கப்பட்டுள்ளது. மனித உரிமை ஆர்வலர் சலீம் ஜாவித் இது தொடர்பில் தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார். அதில், 'பாமியான் நகரில் உள்ள ஹசாரா இனத் தலைவர் அப்துல் அலி மஸாரியின் சிலையை தலிபான்கள் தகர்த்துள்ளனர். கடந்த முறை ஆட்சியின்போது அப்துல் அலியை தூக்கிலிட்டு புத்தர் சிலைகளை உடைத்து, வரலாற்று சுவடுகளை தலிபான்கள் அழித்தனர். இதுதான் தலிபான்கள் கூறுகின்ற மன்னிப்பா?' எனத் தெரிவித்துள்ளார்

இதற்கிடையே ஹசாரா இனத்தவர்கள் வசிக்கும் பல்வேறு மாவட்டங்களில் ஆளுநர்களாக பெண்கள் பதவியில் உள்ளனர்.

அதில் சாஹர்ஹிந்த் மாவட்ட ஆளுநர் சலிமா மஸாரியை தலிபான்கள் சிறைப்படுத்தி வைத்துள்ளனர். (ம)



# தலிபான்களை கனடா அங்கீகரிக்கமாட்டாது!

## ஜஸ்ரின் திட்டவட்டம்

காபூல், ஓக. 19

ஆப்கானிஸ்தானில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஜனநாயக ரீதியான அரசை நீக்கிவிட்டு தலிபான்கள் ஆயுதங்கள் மூலம் ஆட்சியைப் பிடித்துள்ளார்கள். அவர்களை கனடா அங்கீகரிக்காது என்று கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அரசை அங்கீகரிக்கும் திட்டம் ஏதும் கனடாவுக்கு இல்லை. கனடாவின் சட்டங்களின்படி, தலிபான்கள் அறிவிக்கப்பட்ட தீவிரவாத குழுக்கள். எங்களின் நோக்கம் ஆப்கானிஸ்தானில் சிக்கியிருக்கும் மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதுதான். ஆதலால், விமானநிலையத்தில் காத்திருக்கும் மக்களை சுதந்திரமாக எங்கும் செல்ல தலிபான்கள் அனுமதிக்க வேண்டும் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பும் இதேபோன்று ஆப்கானிஸ்தானை ஆயுதங்கள், அடக்குமுறை மூலம் தலிபான்கள் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்தார்கள். அப்போதுகூட கனடா தலிபான்களை அங்கீகரிக்கவில்லை, அவர்கள் அரசை வரவேற்கவும் இல்லை' என்றார். (ம)



# இஸ்லாமிய சட்டங்களின்படி பெண்களுக்கு உரிமைகள்!

## தலிபான்களின் நிலைப்பாடு இது

காபூல், ஓக. 19

இஸ்லாமிய சட்டங்களுக்கு உட்பட்டு பெண்களுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்படும், கல்வி கற்கலாம், வேலைக்குச் செல்லலாம் என தலிபான் தீவிரவாத அமைப்பின் சார்பில் உறுதியளிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறியபின், அங்கிருக்கும் பெரும்பாலான மாகாணங்களை தலிபான் தீவிரவாதிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். தலைநகர் காபூலில் தலிபான்கள் நுழைந்ததை அறிந்த அதிபர் அஷ்ரப் கனி தஜிகிஸ்தானுக்கு தப்பி ஓடிவிட்டார். தற்போது தலிபான்களின் ஆட்சி ஆப்கானிஸ்தானில் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களின் ஆட்சியில் பெண்களின் உரிமைகள் எவ்வாறு இருக்கும் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு உள்ள நிலையில், அவர்களுக்கு இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு உரிமைகள் வழங்கப்படும் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர். தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் முஜாகித் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தலிபான்கள் ஆட்சியில் சித்தாந்தங்கள், நம்பிக்கைகள் ஒரேமாதிரியாகத்தான் இருக்கும் ஏனென்றால் தலிபான்கள் முஸ்லிம்கள். ஆனால், கடந்த முறையைவிட இந்த முறையில் தலிபான்களுக்கு ஏராளமான அனுபவங்கள் கிடைத்துள்ளன. அந்த அனுபவத்தால் அவர்கள் கண்ணோட்டம் மாறும். பெண்களுக்கான உரி



மைகளை இஸ்லாமிய சட்டப்படி வழங்க தலிபான்கள் கடமைப்பட்டுள்ளார்கள். பெண்கள் சுகாதாரத்துறையில் பணியாற்றலாம், கல்வி கற்கலாம், வெளியேசெல்லும்போது ஹிஜாப் அணிந்து செல்ல வேண்டும். பெண்களுக்கு எதிராக எந்த பாகுபாடும் காட்டப்படாது.

உலக நாடுகளில் முஸ்லிம் பெண்கள் பலவாறு நடத்தப்படுகிறார்கள். இந்த தேசத்திலேயே கிராமப்புறங்களில் கட்டுக்கோப்பான முஸ்லிம்களாகவும் பெண்கள் இருக்கிறார்கள். பாகிஸ்தானில் பெண் ஒருவர் பிரதமராகவே வந்துவிட்டார், சவுதி அரேபியாவில் பெண்கள் கார் செலுத்தவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பும் இல்லை. ஆனால், தலிபான்கள் வந்தபின், மீண்டும் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படும். ஆப்கானிஸ்தானில் இருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்கள், சர்வதேச அமைப்புகள், உதவும் அமைப்புகள் [illegible] அவற்றின் பாதுகாப்பு [illegible] செய்யப்படும் என்றார். (ம)

# ஹெய்ட்டி நிலநடுக்கம்: பலி 1,941ஆக உயர்வு

போர்ட் ஆப் பிரின்ஸ், ஓக. 19

ஹெய்ட்டி நாட்டில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 941ஆக அதிகரித்தது. தலைநகர் போர்ட் ஆப் பிரின்ஸில் இருந்து 110 கிலோமீற்றர் தூரத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. மக்கள் குடியிருப்புகளும், அடுக்குமாடிக் கட்டடங்களும் உள்ள இடத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் உயிரிழப்பு எண்ணிக்கை மிகையாக ஏற்பட்டது. நிலநடுக்கத்தில் சுமார் 1,400 பேர் உயிரிழந்தனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இறப்பு எண்ணிக்கை தற்போது ஆயிரத்து 941ஆக அதிகரித்துள்ளது. மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)



[illegible] ஸ்பெய்னில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டிருந்த காட்டுத் தீ தற்போது [illegible]க்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. தீ மேற்கொண்டு பரவாதிருக்க குறித்த வனப்பகுதியை குளிர்விக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெடமுலான வம்சம்:

## டொன் அல்வின் ராஜபக்சவின் நான்கு மகன்மாரும் மூன்று பேரப்பிள்ளைகளும்

ஆங்கிலத்தில்: டி.பி.எஸ். ஜெயராஜ்
தமிழில் : பாலன்

பஸில் ரோஹன ராஜபக்ச ஜூலை 8, 2021 அவரது சகோதரர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவினால் இலங்கை அரசில் நிதியமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார். அந்த நியமனத்தை பெரிதும் பாராட்டிய பஸிலின் ஆதரவாளர்கள் புதிய நிதியமைச்சரை, நாடு மூழ்கிக்கொண்டிருக்கும் பொருளாதாரச் சிக்கலில் இருந்து அதை விடுவிக்கப்போகும் 'மீட்பர் ' என்று வர்ணிக்கிறார்கள். கோட்பாட்டு பிடிவாதத்தை குறைவாகக் கொண்டவரும் கூடுதலான அளவுக்கு நடைமுறைச்சாத்தியமான அணுகுமுறைகளை கடைப்பிடிப்பவருமான பஸில் காரியங்களைச் செய்விப்பதில் வல்லவர் என்று புகழ் பெற்றவர் என்று கூறப்படுகிறது. அத்துடன் நிதி விவகாரங்களை இந்த கட்டத்தில் கையாளுவதற்கு சரியான தெரிவு அவரே என்றும் கூறப்படுகிறது.

இதை அபத்தம் என்று அலட்சியம் செய்யும் ராஜபக்ச எதிர்ப்பு முகாம் பஸில் ஒரு தீர்வு அல்ல, தற்போதைய நெருக்கடியின் தெளிவாகக் காணக்கூடிய அடையாளம் மாத்திரமே என்று கூறுகிறது. இலங்கை விரைவாக ஒரு "தோல்விகண்ட அரசாக" மாறிக்கொண்டுவருகிறது என்றும் சுட்டிக்காட்டும் அவர்கள் நோய்க்கு ஒரு மருந்தாக பஸிலின் நியமனம் அவரது சகோதரர் ஜனாதிபதி ராஜபக்சவின் தோல்வியையே வெளிக்காட்டுகிறது என்றும் கூறுகின்றனர்..

இவையிரண்டும் அரசியல்ரீதியில் துருவமயப்பட்ட இலங்கையில் புதிய நிதியமைச்சர் நியமனம் தொடர்பிலான பரந்தளவு முரண்பட்ட நிலைப்பாடுகள் என்றால், பஸிலின் உயர்வு உலகின் செல்வாக்குமிக்க ஊடகங்களில் சில பிரிவினர் மத்தியில் சுவாரஸ்யமான எதிர்வினையைக் கிளப்பியிருக்கிறது. இது ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் அதிகார மேலாதிக்கத்தை ஒரு தனிக்குடும்பம் அனுபவிப்பதற்கான ஒரு பிரகாசமான உதாரணமாக விளங்குகின்றது. இந்தியாவில் அரசியல் ஒரு குடும்பத்தின் வியாபாரமாக விளங்குவதற்கு பல உதாரணங்களைக் கூறலாம். தெற்காசியாவிலும் அவ்வாறே. ஆனால், இலங்கையில் அரச உயர்பீடங்களை ஒரு தனிக்குடும்பம் ஆதிக்கம் செலுத்துகின்ற அளவுக்கு அந்த நாடுகளில் குடும்பங்களின் ஆதிக்கத்தை காண்பது அரிது. இலங்கை சட்டரீதியாக மக்களால் தெரிவுசெய்யப்படுகிற அரசை கொண்ட ஒரு நாடு என்பதே இங்கு " தனித்துவமான " அம்சமாக நோக்கப்படவேண்டியதாகும். மத்திய கிழக்கில் அல்லது புரூனியில் அரசுகளை ஒரு குடும்பம் அல்லது அதன் அகன்ற குடும்பம் ஆதிக்கம் செலுத்துவது மிகவும் வழமையானதாகும். இந்த நடைமுறை சில ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க சர்வாதிகார ஆட்சிகளிலும் காணப்படுகிறது.

குறைபாடுகளுடனானதாக இருந்தாலும் இலங்கை ஒரு துடிப்பான ஜனநாயக நாடு என்பதே இங்குள்ள வித்தியாச மாகும். இருந்தும் கூட இலங்கையில் ஒரு குடும்பம் அரசின் மீது பரந்தளவிலான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறது. அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்படுகின்ற பட்ஜெட் நிதியில் 75 சதவீதமானவை ராஜபக்ச குடும்பத்தின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அமைச்சுக்களுக்கு உரியவையே.

தற்போது ஒரு தலைமுறையைச் சேர்ந்த நான்கு ராஜபக்சக்கள் ஜனாதிபதியாக, பிரதமராக, அமைச்சரவை அமைச்சர்களாக அரசில் கோலோச்சுகிறார்கள். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சராகவும் இருக்கிறார். பிரதமர் மஹிந்த ராஜபக்ச பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட நடைமுறைப்படுத்தல், புத்தசாசன, மத, கலாசார விவகாரங்கள், நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர். பஸில் ரராஜபக்ச புதிய நிதியமைச்சர். மூத்த சகோதரர் சாமல் ராஜபக்ச அமைச்சரவையில் நீர்ப்பாசன அமைச்சராக இருக்கிறார். தேசிய பாதுகாப்பு, இடர் முகாமைத்துவ, உள்விவகார இராஜாங்க அமைச்சராகவும் சாமல் பதவி வகிக்கிறார்.

அடுத்து ராஜபக்ச குடும்பத்தின் இளைய தலைமுறையை பார்ப்போம். மகிந்தவின் மகன் நாமல் ராஜபக்ச இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை, டிஜிட்டல் தொழில்நுட்ப மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சராக இருக்கிறார். சாமலின் மகன் சுசீந்திர ராஜபக்ச முன்னர் ஊவா மாகாண முதலமைச்சராக பதவியில் இருந்தவர். அவர் இப்போது பல அமைச்சுப்பொறுப்புக்களுடனான இராஜாங்க அமைச்சராக இருக்கிறார். சேதன பசளை உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல், நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவு, மரக்கறி வகைகள், பழங்கள் மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை, மேம்படுத்தல், விதை உற்பத்தி, விவசாயத்துக்கான உயர்தர தொழில்நுட்பம் ஆகியவை அவரின் பொறுப்பில் இருக்கின்றன. நாமலுக்கும் சசீந்திரவுக்கும் மேலதிகமாக இன்னொரு மைத்துனர் நிபுண ரணவக்கவும் எம்.பி.யாக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். அவர் ராஜபக்சக்களின் இளைய சகோதரி காந்தனி ரணவக்கவின் மகனாவார்.




### ஏழு உறுப்பினர்கள்

இவ்வாறாக, " மெடமுலான குடும்பத்தலைவர்" டொன் அல்வின் ராஜபக்சவின் ( டி.ஏ. ராஜபக்ச) குடும்பத்தின் ஏழு உறுப்பினர்கள் சமகால இலங்கையின் அரசியலில் கோலோச்சிக்கொண்டிருக்கிறார்கள். அவரது மகன்களில் கோத்தாபய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, மஹிந்த முன்னர் ஜனாதிபதி, இப்போது பிரதமர், சமலும் பஸிலும் அமைச்ச ரவை அமைச்சர்கள். அவரது பேரப்பிள்ளைகளில் நாமல் அமைச்சரவை அமைச்சர், சசீந்திர இராஜாங்க அமைச்சர். இன்னொரு பேரன் நிபுண நாடாளுமன்ற உறுப்பினர். டி.ஏ.ராஜபக்ச இரு தசாப்தங்களாக அரச சபை உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

ஆனால், டி.ஏ.ராஜபக்சவுக்கும் அவரது வாரிசுகளுக்கும் இடையில் ஒரு முக்கியமான வேறுபாடு இருப்பதை நிச்சயம் அவதானிக்கவேண்டும். தனது பல வாரிசுகளைப் போலன்றி, டி.ஏ. ராஜபக்ச அமைச்சுப்பதவிகளுக்கு பேராசை கொண்டவரோ அல்லது அரசியல் அதிகாரத்தின் மீது வெறிகொண்டவரோ அல்லர். அதிகாரத்தின் மீதும் பதவிகள் மற்றும் வரப்பிரசாதங்கள் மீதும் பேராசை இல்லாத ஒரு எளிமையான அரசியல்வாதியான அவரைப்போன்றவர்களைக் காண்பது அரிது. [illegible] போன்ற [illegible] இலங்கை அரசியல் அரங்கில் வெற்றிகரமாக நடைபோட்டார் என்பதை நம்புவது கடினம். டொன் அல்வின் ராஜபக்சவின் மகன்கள் மற்றும் பேரப்பிள்ளைகளின் கைகளில் அரசியல் அதிகாரம் மிகையாக இப்போது குவிந்துகிடக்கின்ற தற்போதைய நிலையையும் நம்புவது கஷ்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜபக்சக்களைப் பற்றி இருவரிடமிருந்து நான் நேரடியாகவே விபரங்களை பல வருடங்களுக்கு முன்னர் பெற்றேன். அவர்கள் இருவரும் இன்று உயிருடன் இல்லை. ஒருவர் சட்டத்தரணியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான புத்திக குருகுலரத்ன. அவர் கடந்தமாதம் காலமானார். தனக்கு தெரிந்தவற்றுக்கு அப்பால், ராஜபக்ச குடும்பத்தின் சில உறுப்பினர்களுடன் கதைத்து கூடுதல் தகவல்களைப் பெற்றுத்தருகின்ற அளவுக்கு பெருந்தன்மையை அவர் வெளிக்காட்டினார்.

அடுத்தவர் முன்னாள் நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் குறைகேள் அதிகாரியுமான சாம் விஜேசிங்க. 2014 ஆம் ஆண்டில் காலமான அவர் தெற்கைச் சேர்ந்தவர். அத்துடன் ராஜபக்சக்களுக்கு உறவுக்காரர். டி.ஏ.ராஜபக்சவை அவர் மாமா என்றே அழைப்பார்.

ருஹுணுவில் அசைக்கமுடியாத ஒரு அரசியல் குடும்பமாக ராஜபக்சக்களின் எழுச்சி டி.ஏ.ராஜபக்சவின் தந்தையும் மகிந்த மற்றும் சகோதரர்களின் பாட்டனாருமான டேவிட் விதானாராச்சி ராஜபக்சவுடன் தொடங்கியது. தென்பகுதியில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரக்கெட்டியவில் புதியங்கம கிராமத்தைச் சேர்ந்தவர் டொன் டேவிட் ராஜபக்ச.

சிங்கள மன்னர்களின் புராதன ருஹுணு இராச்சியம் இன்று காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகல மாவட்டங்களாக இருக்கும் பகுதிகளை உள்ளடக்கியதாகும். டொன் டேவிட் அல்லது டி.டி.ராஜபக்ச இஹல வலிகட கோரளை என்று அறியப்பட்ட கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களின் கொத்தணியின் மரபுவழி கிராமத்தலைவராவார்( விதான ஆராய்ச்சி).

(தொடரும்)

# தலிபான் ஆட்சியை ஏற்குமா இலங்கை?

கொழும்பு, ஓக. 19

ஆப்கானிஸ்தானில்ஏற்பட்டுள்ளமாற்றத்தால்அங்குள்ளமக்கள்குழப்பமடைந்துள்ளனர். நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலைமையும் காணப்படுகின்றது. இதனையிட்டு கவலை யடைகின்றோம் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக் களத்தில் நேற்றுமுற்பகல் நடைபெற்றது. இதன்போது, ஆப்கானிஸ்தான் நிலவரம் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டதா?, தலிபான்களின் ஆட்சியை இலங்கை ஏற்குமா?, அங்குள்ள தூதரகம் தொடர்ந்து செயற்படுமா?, ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பில் இலங்கையின் நிலைப்பாடு என்ன? என்பன தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சார்க் வலயத்திலுள்ள சகோதர நாடு என்ற அடிப்படையில் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலவரம் தொடர்பில் உணர்வுபூர்வமாகவே பார்க்கின்றோம். அங்கு ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் எதுவும் கலந்துரையாடப்படவில்லை. ஆனால், இந்த விவகாரம் குறித்து நாட்டின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துமாறு வெளிவிவகார அமைச்சருக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார். அதற்கான நடவடிக்கை இன்று (நேற்று) எடுக்கப்படும். ஆப்கான் மக்கள் குழப்பமடைந்துள்ளனர். நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல முற்படுகின்றனர். இது தொடர்பில் கவலையடைகின்றோம். சுயாதீன நாடு என்ற அடிப்படையில் இலங்கை சரியான முடிவை எடுக்கும்- என்றார். (த-44)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

மேலும் கணினி அனுபவமுள்ள பில் கிளாக் உடன் தேவை

தொடர்பு 077 748 8093

## வீடு வாடகைக்கு

பிறவுன் வீதியில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குண்டு.

T.P.: 077 866 5606

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## சாரதிகளுக்கான பதவி வெற்றிடம் - 4 வெற்றிடங்கள்

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 26 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்டின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.


அனைத்து விண்ணப்பதாரிகளும் கனரக வாகன (AD) ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பங்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு (மணலாறு, கொக்கிளாய் அண்டிய பகுதிகள்) மாவட்ட நகரப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் வசிப்பவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 26 ஆவணி 2021 வியாழக்கிழமைக்கு முன்னதாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

**மனித வள முகாமையாளர்**
**த ஹலோ ட்றஸ்ட் - இலங்கை**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்




யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின்
மணிவிழாக் காணும் எமது அதிபர்

### திரு. திருநாவுக்கரசு சிவநாதன்
(SLPS I)

எமது வித்தியாலயத்தில் 03.09.2012 - 18.08.2021 வரை அதிபராகப் பணியாற்றி இன்று (19.08.2021) வியாழக்கிழமை சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு அவரின் சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

| | | |
|---|---|---|
| கிளி/ இரணைதீவு றோ.க வித்தியாலயம் | 06.04.1988 | - 15.05.1990 |
| யா/ பலாலி ஆசிரிய கலாசாலை | 16.05.1990 | - 31.12.1991 |
| கிளி / இரணைதீவு றோ.க. வித்தியாலயம் | 01.01.1992 | - 14.09.1992 |
| கிளி / கறுக்காய் தீவு மகா வித்தியாலயம் | 15.09.1992 | - 30.09.1997 |
| கிளி / ஞானிமடம் அ.த.க பாடசாலை | 01.10.1997 | - 14.04.1998 |
| கிளி / கௌதாரிமுனை அ.த.க பாடசாலை | 15.04.1998 | - 06.05.2003 |
| கிளி / சுண்ணாவில் அ.த.க பாடசாலை | 07.05.2003 | - 28.02.2008 |
| கிளி / கறுக்காய்த் தீவு மகாவித்தியாலயம் | 01.03.2008 | - 02.09.2012 |
| யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம் | 03.09.2012 | - 18.08.2021 |

வாழ்த்துவோர்
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்**

## கட்டடம் வாடகைக்கு

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில் 1000 சதுர அடியில் அலுவலகமாகவோ களஞ்சியமாகவோ பயன்படுத்தக்கூடிய கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு 077 286 6429

## வேலைவாய்ப்பு வங்கி

யாழில் வேலையாட்கள் தேவையான தனியார் நிறுவனங்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளலாம்.

**kpjobbank.com**
தொடர்பு:074 089 1995

## திருமண சேவை

எம்மிடம் வெளிநாட்டு, உள்நாட்டு மணமகன், மணமகள் உள்ளனர். பொருத்த மானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**kpthirumanam.com**
**0740891995, 077 0050 344**

## போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம் வீடு வாடகைக்குத் தேவை

யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள் தங்குவதற்கு 10 அறைகளிற்கு மேல் வசதிகளினுடைய வீடுகள் வாடகைக்கு தேவைப்படுகின்றது. வீடு வைத்தியசாலையிலிருந்து மூன்று கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்திற்குள் இருக்க வேண்டும். வீடு வாடகைக்கு தர விரும்புபவர்கள் மேலதிக தகவல்கள் அடங்கிய படிவத்தினை அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ மாத வாடகையுட்பட்ட விவரங்களினை மூடிய கடித உறையில் 02.09.2021 முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக அனுப்பிவைக்கவும். விலை மதிப்பீட்டு திணைக் களத்தின் மதிப்பீட்டிற்கு அமைவாக வாடகை வழங்கப்படும்.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## பதவி வெற்றிடம் - வாகனத் திருத்துனர் (மெக்கானிக்) - Mechanic Level- II

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 26 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.
நாம் மேலும் சில வாகனத் திருத்துனர்களை ஏற்கனவே இருக்கும் எங்களுடைய வேலைத்தள அணியினருடன் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றோம்.

- தேவைப்படும் தகைமைகள்
  - இலகு மற்றும் கனரக வாகனங்களைத் திருத்தக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
  - 5 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
  - NVQ வாகனத் திருத்துனர் சான்றிதழ் பெ றவர்கள் விரும்பத்தக்கது.
  - கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக மின்னணுக் கட்டுப்பாட்டு அமைப்புத் தொடர்பான அறிவினைக் கொண்டிருப்பதும் ஆங்கில மொழியில் பேசும் திறனைக் கொண்டிருப்பதும் மேலதிக தகமையாகக் கருதப்படும்.

சம்பளமும் அதனுடன் தொடர்புபட்ட நன்மைகளும் அனுபவம் மற்றும் தகமைகளைப் பொறுத்து அமையும்

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விபரங்கள் என்பவற்றை 26 ஆவணி 2021 வியாழக்கிழமைக்கு முன்பாக கீழ் உள்ள தபால் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**மனித வள முகாமையாளர்**
**ஹலோ ட்ரஸ்ட், இலங்கை**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி**
E-mail: hr@halosrilanka.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்பர் காளான்





**தேவையான பொருட்கள்**

1 கப் காளான்
2 வெங்காயம்
1 தக்காளி
1 டேபிள் ஸ்பூன் இஞ்சி பூண்டு பேஸ்ட்
1 ஸ்பூன் மிளகாய் தூள்
2 ஸ்பூன் மல்லித்தூள்
1/4 ஸ்பூன் மஞ்சள் தூள்
1 ஸ்பூன் மிளகு
1 ஸ்பூன்சோம்பு
உப்பு
2 கொத்து கருவேப்பிலை
எண்ணெய்

## செய்முறை

ஒரு பாத்திரத்தில் மிளகு மற்றும் சோம்பு சேர்த்து நன்கு வாசம் வரும் வரை வறுத்து எடுத்து பவுடராக அரைத்து எடுத்துக் கொள்ளவும். (எண்ணெய் சேர்க்கக் கூடாது). வெங்காயம் மற்றும் தக்காளியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். (தக்காளி அதிகம் சேர்க்க கூடாது). காளானுடன் சிறிது கல் உப்பு சேர்த்து மீன் கழுவது போல் அதிக அழுத்தம் கொடுக்காமல் கழுவி பின்னர் நறுக்கிக் கொள்ளவும். ஒரு கடாயில் சிறிது எண்ணெய் சேர்த்து சூடானதும் 1/4ஸ்பூன் சோம்பு சேர்த்து தாளிக்கவும். பின்னர் நறுக்கிய வெங்காயம் சேர்த்து நன்கு வதக்கவும். பின்னர் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். பின்னர் மஞ்சள் தூள் மற்றும் மிளகாய் தூள், மல்லித்தூள் சேர்த்து வதக்கவும்.
பின்னர் தக்காளி சேர்த்து வதக்கவும். பின் அதனுடன் நறுக்கிய மஷ்ரூம் சேர்த்து வதக்கவும். பின் தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறவும். (தண்ணீர் சேர்க்க கூடாது). மிதமான தீயில் 10 நிமிடம் வேக விடவும். பின் மிளகு, சோம்பு பவுடரை தூவி 2நிமிடம் கிளறி அதன் மேல் கருவேப்பிலை தூவி பரிமாறவும்.





# 8 போட்டு நோய்களை விரட்டு

எட்டு நடைப்பயிற்சி என்பது பத்தடி அகலமும் பதினைந்து அடி நீளமும் கொண்ட இடத்தில் 8 என்கிற வடிவத்தை வரைந்து கொள்ள வேண்டும். அதில் எட்டு போல் எப்படி நடைப்பயிற்சியை மேற்கொள்கிறோம்? அதனால் கிடைக்கக் கூடிய நன்மைகள் என்னென்ன? என்பதில் தான் சூட்சுமம் உள்ளது.
இந்தப் பயிற்சியை யார் வேண்டுமானாலும் வயது வித்தியாசம் இல்லாமல் செய்யலாம். இந்தப் பயிற்சியை தலைகீழாக செய்யக் கூடாது. அதை முறையாக எப்படிச் செய்ய வேண்டும்?
எட்டு என்கிற வடிவத்தின் கீழ்ப்புறத்தில் இடது பக்கத்திலிருந்து ஆரம்பித்து மேல்புறத்தில் வலது பக்கம் வழியாக சென்று, பின் இடதுபுறம் வந்து மீண்டும் கீழ்ப்பகுதியில் இருக்கும் வலது பக்கத்தை அடைவது தான் முறையாக சுற்ற வேண்டிய பயிற்சியாகும்.
ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும், எத்தனை சுற்றுகள் வேண்டுமானாலும் சுற்றலாம். இந்தப் பயிற்சி எடுத்துக் கொள்ளும் முன் சாப்பிட்டு குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகி இருக்க வேண்டும் என்பதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் ஆரம்பிக்கும் முன்பு தேவையான அளவிற்கு தண்ணீரை குடித்துக் கொள்ள வேண்டும். தினமும் குறைந்தது 15 நிமிடம் எட்டு வடிவில் சுற்றினால் கிடைக்கக் கூடிய பலன்கள் எல்லை இல்லாதவை. இப்படி எட்டு வடிவில் சுற்றுவதால் மூக்கில் இருக்கும் இரண்டு துவாரங்களுக்குள் நல்ல சுவாசம் கிடைக்கும். இதனால் உடல் அதிக சக்தி பெற்று உடலில் இருக்கும் எல்லா வியாதிகளையும் எளிதாக குணப்படுத்துகிறது. மூளை மற்றும் நம் உடம்பில் இருக்கும் ஒவ்வொரு அணுவும் புத்துணர்ச்சி பெறுவதால் உடலில் இருக்கும் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. நரம்பு மண்டலங்கள் வலுவாகி மன அழுத்தத்தை குறைக்கிறது. உடல் உறுப்புகள் அத்தனையும் சுறுசுறுப்புடன் இயங்க வழி வகுக்கிறது. இதனால் மன அமைதி, ஆரோக்கியம், ஆயுள் அதிகரிக்கிறது.
இந்த பயிற்சியை மேற்கொள்ள எந்த விதமான செலவும் செய்யத் தேவையில்லை. மேலும் உபகரணங்கள் எதுவும் தேவை இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும் செய்யலாம்.
தினமும் தொடர்ந்து இந்த பயிற்சியை மேற்கொண்டால் தீராத தலைவலி, தலை சுற்றல் போன்ற பிரச்சனைகள் ஏற்படாது. மூக்கடைப்பு, மார்புச்சளி ஆகிய பிரச்சனைகள் தீரும். இதயத்துக்கு வலு சேர்ப்பதால் மார்புவலி குறையும். கண் பார்வை குறைபாடு, கேட்கும் திறன் குறைவது போன்ற பிரச்சனைகளும் நீங்கும். குதிகால் வலி, மூட்டு வலி, முதுகு வலி ஆகிய வலிகள் நீங்க இந்த பயிற்சி நல்ல ஒரு பயனைக் கொடுக்கும். மேலும் ஜீரண சக்தி அதிகரிப்பதால் நீரிழிவு நோய் குறையும். ஆக மொத்தத்தில் உச்சி முதல் பாதம் வரை இருக்கும் அனைத்து வியாதிகளையும் தீர்க்க கூடிய அற்புத ஆற்றல் இந்த பயிற்சிக்கு உண்டு.

# ஒஹோ எந்தன் பியூட்டி...



## 1. ஃபியூச்சர் ஸ்டைல்

**கூந்தல்**
கூந்தலை ஃபிளாட் அயர்ன் செய்து, டியூப் கொண்டு சுருட்டி உச்சந்தலையில் முடிந்து வைக்கவும். நன்றாக ஹேர்ஸ்பிரே செய்யவும்.

**ஐஸ் லிப்ஸ்**
உங்கள் சரும நிறத்துக்கு ஏற்ற ஐஸ் பிங்க் ஐ ஷேடோவை தேர்ந்தெடுங்கள். உதட்டில் கலரை சமமாகப் பூசுங்கள்.

**டபிள் விங்க்டு ஐஸ்**
கண் இமைகளின் மேல் நியூட்ரல் ஷடோ இடுங்கள். நன்றாக கலந்து விடுங்கள். கண் புருவங்களில் கறுப்பு அல்லது கிரே ஐ பென்சில் கொண்டு நீண்ட விங்க் வரையுங்கள். கண் உள் முனையில் சில்வர், வெள்ளை பென்சிலால் பிரகாசம் அடையச் செய்யுங்கள். கறுப்பு மஸ்காராவுடன் மேக்கப்பை முடியுங்கள்.



## 2. பளிச் ஷைன்

**முகம்**
உங்கள் முகத்தை சுத்தம் செய்து ஆல்ககோல் இல்லாத டோனரை கன்னங்கள் மற்றும் முகத்தின் டிஸோனில் பூசுங்கள். கிரீமைப் பூசி சருமத்தைத் தயார் செய்யுங்கள். ஒளிரும் பவுண்டேஷனைப் பயன்படுத்தி ப்ளெண்ட் செய்யுங்கள். சில நிமிடங்கள் கழித்து, பவுடரைப் பயன்படுத்தி பைனல் டச் செய்யவும்.

**கண்கள்**
கண்களை பிரவுன் நிற ஐ பென்சிலைப் பயன்படுத்தி அவுட்லைன் செய்யவும். பளிச்சென்ற நிற கிரீம் பேஸ்டு ஐஷேடோவைப் பூச ஆங்குலர் பிரஷைப் பயன்படுத்தவும். விளிம்புகள் வரை பிளெண்ட் செய்யவும். மேல் இமையில் பிரவுன் ஐலைனரைப் பயன்படுத்தவும். மேல் மற்றும் கீழ் இமைகளில் மஸ்காராவைப் பயன்படுத்தவும்.

**உதடுகள்**
உதடுகளில் லிப் பாமைப் பூசவும். கூடுதல் பாமை துடைத்தெடுத்து விட்டு, லிப் லைனரால், உதட்டின் வெளி ஓரங்களை லைன் செய்யவும். உதட்டை பளிச்சென்ற நிறத்தால் நிரப்பி, கலரை பிரஷால் பூசுவதால் கச்சிதமாகப் பூச முடியும்.

**கன்னங்கள்**
கன்னக் கதுப்புகளை எடுப்பாக காண்பிக்க, பிளஷைத் தேர்ந்தெடுக்கவும். பிளஷுக்கு மேலே சற்று ஹைலைட்டரைப் பூசவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு டெல்டா நோயாளியால் 6 பேருக்கு தொற்று ஏற்படும்

மருத்துவர் எம்.ஆதவன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக.19

**ஒரு டெல்டா தொற்றாளர் இன்னும் ஆறு பேருக்கு இந்தநோயைபரப்பமுடியும்என்பதுடன்,நோயாளர் எண்ணிக்கை பல மடங்கானால் ஒட்சிசன் மட்டுமல்லாது சுவாசக் கருவிகள் என்பனவற்றை பெற்றுக் கொள்வதிலும் நெருக்கடி ஏற்பட்டு, நோயாளிகளை பராமரிக்க முடியாத நிலை ஏற்படும் என்று மருத்துவர் எம்.ஆதவன் தெரிவித்துள்ளார்.**

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக் கிளையின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் போதனா மருத்துவமனையில் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெல்டா திரிபு மிக வேகமாக பரவி வருகின்றது. முதலில் கண்டறியப்பட்ட கொரோனாவை விட டெல்டா இரண்டு மடங்கு வீரியமாக பரவக்கூடியது. ஒரு டெல்டா தொற்றாளர் இன்னும் ஆறு பேருக்கு இந்த நோயை பரப்ப முடியும்.

கொழும்பு மருத்துவமனைகளில் சரி இந்தியாவிலும் சரி தொற்று நிலைமை கட்டுக்கடங்காமல் அதிகரிப்பதனால் மருத்துவமனைகளின் பராமரிக்கும் திறனுக்கு மேலாக நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நோயாளர்கள் எண்ணிக்கை சற்று அதிகரித்தால் யாழ்ப்பாணத்திலும் இந்த நிலை ஏற்படும். இதனை நாங்கள் குறைக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு தனிநபரும் சில சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். வீட்டிலிருந்து அநாவசியமாக வெளியில் வருவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏதாவதொரு காரணத்துக்காக வெளியில் வந்தால் போதிய சமூக இடைவெளியை பேணி எல்லா நேரங்களிலும் முகக்கவசங்களை சரியாக அணிந்திருத்தல் அவசியமாகும்.

இல்லாவிடில் ஒட்சிசன் மட்டுமல்லாது சுவாசக் கருவிகள் செயற்கை சுவாசக் கருவிகள் என்பனவற்றை பெற்றுக் கொள்வதிலும் நெருக்கடி ஏற்பட்டு நோயாளிகளை பராமரிக்க முடியாத நிலை ஏற்படும்‡ என்றார். (ஜ-26)



# புதையல் தோண்ட முற்பட்டவர்கள் கைது

கிளிநொச்சி, ஓக. 19

கிளிநொச்சியின் அழகாபுரி பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் நேற்றிரவு நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் வவுனியாவைச் சேர்ந்த இருவர், யாழ்ப்பாணம், விசுவமடுப் பகுதிகளைச் சேர்ந்த தலா ஒருவர் என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்களிடம் இருந்து புதையல் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஸ்கானர் கருவி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (த-6,113)

# வவுனியாவில் கடத்தல் முறியடிப்பு வாகனத்துடன் அறுவர் கைது

வவுனியா, ஓக. 19

கொடுக்கல் வாங்கல் பிணக்கின் காரணமாக வவுனியாவில் குடும்பத் தலைவர் ஒருவர் வாகனம் ஒன்றில் கடத்திச்செல்லப்பட்டநிலையில், பொலிஸாரால் மீட்கப்பட்டார்.

கடத்தினர் என்ற குற்றச்சாட்டில், வாகனத்துடன் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் உள்ள குடும்பத் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒருவரிடம் ஒரு தொகைப் பணத்தை கடனாக பெற்றிருந்தார். குறித்த பணம் இதுவரை செலுத்தப்படவில்லை. இந்தநிலையில் குறித்த குடும்பத்தலைவர் தனது மனைவி, பிள்ளைகளுடன் வவுனியா நகர் நோக்கி முச்சக்கர வண்டியில் சென்றிருந்தார்.

இதன்போது, வவுனியா, இலுப்பையடிச் சந்தியில் குறித்த குடும்பத் தலைவரை வழிமறித்த சிலர் அவரது மனைவியையும், பிள்ளையையும் அந்த இடத்தில் விட்டுவிட்டு வெள்ளை வாகனம் ஒன்றில் குடும்பத் தலைவரை ஏற்றிச் சென்றனர். இதன்போது வாகன இலக்கத்தை குறித்துக் கொண்ட மனைவி வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

விரைந்து செயற்பட்ட வவுனியா பொலிஸார் குறித்த வாகனத்தையும், குடும்பத் தலைவரையும், வாகனத்தில் இருந்த ஆறு பேரையும் வவுனியா வெளிக்குளம் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

இதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு வாகனம் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொடுக்கல் வாங்கல் பிணக்கின் காரணமாகவே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-18)

# மற்றொரு எம்.பிக்கும் கொரோனாத் தொற்று

கொழும்பு, ஓக. 19

நாடாளுமன்ற உறுப்பினர் திலக் வீரசிங்க கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். ஓகஸ்ட் மாதத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 7ஆவது நாடாளுமன்ற உறுப்பினர் இவராவார். பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலக் வீரசிங்கவுக்கு அறிகுறிகள் தென்பட்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதியானது.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் மனைவி, மகள் ஆகியோருக்கு நேற்றுமுன்தினம் தொற்று உறுதியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

# ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் ஒற்றை டோஸ் அதிக நோயெதிர்ப்புத் திறன்

கொழும்பு, ஓக. 19

ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் ஒற்றை டோஸ் அதிக நோயெதிர்ப்புத் திறன் கொண்டது என்று ஒரு புதிய ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் இரண்டு விஞ்ஞானிகள் உட்பட உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் குழுவால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியிலேயே இந்தவிடயம் கண்டறியப்பட்டுள்ளது.

ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கல் நன்மை பயக்கும் என்றும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஸ்புட்னிக் முதல் டோஸின் நோயெதிர்ப்பு எதிர்ச்செயல்களை ஆராய்ந்தனர்.

இலங்கை மக்கள் தொகையில், அஸ்ட்ரா ஜெனெகாவின் முதல் டோஸைப் பெற்ற 4 வாரங்களுக்குப் பின்னர் இருந்த நோயெ திர்ப்புடன் இது ஒப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# திரவ ஒட்சிசன் இறக்குமதியை அதிகரிக்க அரசு தீர்மானம்

கொழும்பு, ஓக. 19

கொவிட் 19 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்குத் தேவையான 3 லட்சத்து 60 ஆயிரம் லீற்றர் திரவ மருத்துவ ஒட்சிசனை இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கொவிட் 19 தொற்று தீவிரமடைந்துள்ள நோயாளர்களுக்குத் தேவையான திரவ மருத்துவ ஒட்சிசன் வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காக, ஒரு லட்சத்து 20 ஆயிரம் லீற்றர் ஒட்சிசனை மாதாந்தம் இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்துவதற்காக இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

தற்போது பரவிவரும் திரிபடைந்த கொவிட் வைரஸ் காரணமாக ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், போதுமானளவு ஒட்சிசனை நாட்டில் களஞ்சியப் படுத்துவதற்கு இயலுமான வகையில் தற்போது மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் லீற்றருக்கும் மேலதிகமாக 3 லட்சத்து 60 ஆயிரம் லீற்றர் திரவ ஒட்சிசனை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான முடிவெடுத்து ஆசிரியை உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19
ஆசிரியை ஒருவர் தவறான முடிவெடுத்து கழுத்தில் சுருக்கிட்ட நிலையில்உயிருடன்மீட்கப்பட்டபோதிலும்மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம் அந்தப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.
சம்பவத்தில் இமையாணன் பகுதியைச் சேர்ந்தவரும் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் கற்பிப்பவருமான 42 வயதுடைய ஆசிரியை ஒருவரே தவறாக முடிவெடுத்து உயிரிழந்தார்.
இவர் இரண்டு பிள்ளைகளின் தாயாவார். அவரது சடலம் பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, தொற்றில்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது. இன்று இறப்பு விசாரணை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது. (து-26)


## மரண அறிவித்தல்



பிறப்பு 21 . 10 . 1942 இறப்பு 18 . 08 . 2021

### திருமதி கணபதிப்பிள்ளை அன்னபூரணம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை அன்னபூரணம் அவர்கள் நேற்று (18.08.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், அமரர் தெய்வமலர், நகுலேஸ்வரன், கனகேஸ்வரன், குகனேஸ்வரன், குமுதினி, கோமதி, விக்னேஸ்வரன், அமரர் சாந்தி, சுரேஸ்வரன், மதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் லேன், மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 040 3908



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 . 02 . 1940 இறப்பு 15 . 08 . 2016

### சண்முகம் சிவஞானம்

திதி : 19.08.2021

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா....

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் வட கிழக்கு,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவில்:
குடும்பத்தினர்.


## கொரோனாவால்...

உயிரிழந்துள்ளார்.
மருத்துவமனையின் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை பிரிவில் பணியாற்றி வந்த முகமது ஜனன் (வயது - 34) என்பவரே உயிரிழந்தார்.
கொரோனாத் தொற்றுக்குள்ளான அவர், அதே மருத்துவமனையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டார்.
பின்னர் அவரது உடல்நிலை மோசமடைந்ததால், அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு, சுமார் இரண்டு வாரங்களாக அங்கு சிகிச்சை பெற்றார்.
எனினும், அவரது உடல்நிலை மேலும் மோசமடைந்து, சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (து-இ)

## 170 பேர்...

திணைக்களம் அறிவித்துள்ளது.
இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 604 ஆக அதிகரித்துள்ளது.
நேற்றுமுன்தினம். உயிரிழந்த 170 பேரில் 84 ஆண்களும், 86 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.
இதில் 24 ஆண்கள், 16 பெண்கள் என 40 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 130 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 60 ஆண்களும், 70 பெண்களும் அடங்குகின்றனர். (து-22)


## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 08 . 1944 மறைவு 17 . 08 . 2021

### வல்லிபுரம் சிவப்பிரகாசம் சிவசுப்ரமணியம்

(ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் (விஞ்ஞானம்),
வட – கிழக்கு மாகாணம், திருகோணமலை
ஓய்வுபெற்ற உபஅதிபர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை
இரசாயனவியல் ஆசிரியர்)


ஊரிக்காடு, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் திருகோணமலை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வல்லிபுரம் சிவப்பிரகாசம் சிவசுப்ரமணியம் கொழும்பில் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) மாலை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சிவப்பிரகாசம், இராசம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற ஞானேஸ்வரி, பாலசுப்ரமணியம் (ஓய்வுபெற்ற தலைமை பொறியியலாளர், புகையிரதத் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திரிபுரசுந்தரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை) அன்புக்கணவரும் ரகுராம் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), கோபிராம் (வணிகக் கடற்படை அதிகாரி), ஹரிராம் (சுவிஸ்), சீதர்ராம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜானகி (அபிவிருத்தி உத்தியோகத்தர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி) சிவஜானு (கொழும்பு), பிரமிளா (சுவிஸ்), க்ஜந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கீதாஞ்சலி, அருண்மொழிவர்மன், ஹர்ஷவர்த்தன், லக்ஷிகா, லைஷா, அக்ஷய அருணன், அபிஷன், அபிஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இடம்பெறும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சிவசுப்ரமணியம் ரகுராம்,
கெருடாவில் கிழக்கு, தொண்டைமானாறு

078 790 7433,
071 565 3330



## மரண அறிவித்தல்



### திரு. சீனி ஞானசேகரம்

தோற்றம் : 25.07.1953 மறைவு : 18.08.2021

சாவல்கட்டு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. சீனி ஞானசேகரம் அவர்கள் நேற்று (18.08.2021) புதன்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.08.2021) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.
அன்னாரின் இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகளிலிருந்து...

எதிர்வரும் 31ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும் வகையில் மேற்குறித்த நடைமுறைகளை, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்த்தன வெளியிட்டுள்ளார்.

எனினும், தொழில் மற்றும் சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வெளியே செல்லும்போது இது தாக்கம் செலுத்தாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒன்றுகூடல்கள், மாநாடுகள், பாடசாலைகள், மேலதிக வகுப்புகள் போன்றவற்றை நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் திருமண நிகழ்வுகளும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்குள் பஸ் அல்லது ரயிலில் ஆசனங்களின் அளவுக்கு ஏற்பவே பயணிகளை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள், நிறுவனத் தலைவர் தீர்மானிக்கும் குறைந்த அளவு ஊழியர்களுடனும், அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் குறைந்த அளவு ஊழியர்களுடனும் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களில் வெளி மாவட்டங்களிலிருந்து சேவைக்கு வருவோர், நிறுவனத் தலைவரின் அனுமதிக்கேற்ப கடமையாற்ற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனை நிலையங்கள், கடைத் தொகுதிகள், நிதி நிறுவனங்கள் போன்றன அவற்றின் மக்கள் கொள்ளளவில் 25 வீதத்தினரை மாத்திரம் அனுமதிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொட்டல்கள், விடுதிகள் ஆகியன 50 வீதமான மக்கள் தொகையை சுகாதார வழிகாட்டல்களைப் பேணி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அனைத்து உடற்பிடிப்பு, உடற்பயிற்சி நிலையங்கள், சிறுவர் பூங்காக்கள், உள்ளக விளையாட்டரங்குகள் மற்றும் நீச்சல் தடாகங்கள் என்பன மூடப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இசை நிகழ்ச்சிகள் மற்றும் கடற்கரை களியாட்ட நிகழ்வுகள் என்பனவும் நடத்தப்படக்கூடாது எனப் புதிய சுகாதார வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-22)

## கொழும்பு...

தற்போது வீடுகளில் சிகிச்சை பெறுகின்றனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் நிபுணர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (த-22)

## மூன்று...

யான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர இந்த கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவிவரும் சூழ்நிலையில், அதனைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் மக்கள் வீடுகளிலேயே இருக்க வேண்டும். இதற்காக இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முழுமையான ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் அரசு சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டில் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டுமாறு எமது கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில், சகல கட்சிகளினதும் ஆலோசனை அவசியம். கூட்டு வேலைத்திட்டத்தின் ஊடாக நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியும்- என்றார்.

அதேவேளை, நாட்டை தற்காலிகமாக முடக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய மக்கள் சக்தி உட்பட மேலும் சில எதிர்க்கட்சிகள் நேற்றைய தினமும் கோரிக்கைகளை முன்வைத்தன. (த-44)

## ஒரேநாளில்...

தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 69 ஆயிரத்து 343 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 188 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 16 ஆயிரத்து 528 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

## புதுக்குடியிருப்பில்...

ஒருவர், வாயாலும் மூக்காலும் குருதி வெளியேறிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. வள்ளுவர்புரம், றெட்பானா புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செனவிரத்தின சமரக்கோன (வயது -46) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

அவருக்கு தேநீர் கொண்டுசென்ற நபரே, சடலமாகக் காணப்பட்டதைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர், அவரது உயிரிழப்புத் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகவும் பி.சி.ஆர். பரிசோதனைக்காவும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (த-19,113)

## வயிற்றைக்...

பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தினுள் அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் சாதாரண அகதிகள் முகாமிலும் இன்னொரு பகுதியினர் திருச்சி சிறப்பு முகாமிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தமது உறவுகளுடன் தம்மை சேர்ந்து வாழ அனுமதிக்குமாறு கூறி குறித்த போராட்டக்காரர்கள் கடந்த மாதம் உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கடந்த மாதம் போராட்டக்காரர்களை சந்தித்து நிலுவையிலுள்ள அவர்களின் வழக்குகளை விரைவாக முடித்து தாயகம் செல்ல விரும்புவோரை தாயகம் அனுப்புகின்றோம் என்றும் ஏனையவர்களை சாதாரண முகாமுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கின்றோம் என்றும் உறுதியளித்திருந்தனர்.

எனினும், காலங்கடந்தும் இன்னமும் தங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்தே ஈழத்தமிழர்கள் சிலர் நேற்று தமது உடல்களை கிழித்துக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் றமணன் (வயது 43) என்பவர் வயிற்றைக் கிழித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

படுகாயமுற்ற அவரை சிறைக் காவலர்கள் மாவட்ட அரச மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். குறித்த சம்பவத்தால் சிறப்பு முகாமில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## 10 நாள்களுக்கு...

துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் எச்சரித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்பு வீதமும் சடுதியாக அதிகரித்துவரும் நிலையில், அதனைக் கட்டுப்படுத்துவதற்கு குறைந்தபட்சம் நாட்டை 10 நாள்களுக்கு விஞ்ஞானபூர்வமாக முடக்குமாறு அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்தது. இதனை வலியுறுத்தி நாட்டில் சில பகுதிகளில் நேற்று தொழிற்சங்க கூட்டமைப்பால் கவனவீர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

அவ்வாறு நடைபெற்ற போராட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ரவி குமுதேஷ் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் பொது முடக்கமே அவசியம். அப்போதுதான் வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். அரசியல் ரீதியிலான 'லொக்டவுன்' அவசியமில்லை. விஞ்ஞானபூர்வமான 'லொக்டவுனே' அவசியமாகின்றது. இவ்வாறு நாட்டை முடக்கிய பின்னர் முன்னெடுக்கப்பட வேண்டிய 10 நடவடிக்கைகள் தொடர்பில் அரசிடம் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன்படி 10 யோசனைகளை செயற்படுத்தி 10 நாள்களுக்கு நாட்டை முடக்குமாறு கோருகின்றோம்.

நாளாந்தம் சுமார் ஒரு லட்சம் கொவிட் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் வைரஸ் பரவலின் வேகத்தை கண்டறிய முடியும் என்பதுடன் அவசியமானவர்களை மருத்துவமனைகளில் சேர்க்கவும் முடியும். அதேபோல கட்டில்கள் தயாரிக்கப்பட வேண்டும். இடைத்தங்கல் சிகிச்சை நிலையம் அவசியம் என்பன உட்பட மேலும் சில யோசனைகள் அதில் உள்ளடங்கியுள்ளன.

10 நாள்களுக்கு நாட்டை மூடும் முடிவை நாளைவெள்ளிக்கிழமைக்குள் அரசு எடுக்காவிட்டால், எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் அதற்கான நடவடிக்கையை தொழிற்சங்கம் என்ற அடிப்படையில் நாம் மேற்கொள்வோம்- என்றார். (த-44)

## வடக்கு...

தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

எனினும், அவருக்கு கொரோனாத் தொற்று அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை என்றும் அதனால் அவர், தனது வீட்டிலேயே தன்னைச் சுயதனிமைப்படுத்திக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலரின் மனைவி மற்றும் மகளுக்கு ஏற்கனவே கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தது. ஆனால் பிரதம செயலர் தனிமைப்படுத்தலில் இருக்கவில்லை. கடந்த 9ஆம் திகதி பிரதம செயலருக்கு பி.சி.ஆர். மாதிரி பெறப்பட்டிருந்தது. ஆனால் அவர் மறுநாள் காலை கைதடியிலுள்ள தனது அலுவலகத்துக்குச் சென்றுள்ளார். அன்றையதினம், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலர் இருவரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இந்தநிலையில், மாகாணப் பணிப்பாளர் கேதீஸ்வரன், அவதானிப்புக்குரியவராக இருந்தார். இந்தநிலையில், அவருக்கு அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (த)

## பலவீனமாகிவிட்டது...

என்று எல்லேகுணவங்ச தேரர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் தாக்கத்தால் நாட்டு மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நிலையில், அரசியல்வாதிகள் கொழும்பில் இருந்துகொண்டு அரச வரப்பிரசாதங்களை அனுபவிக்காமல், தமக்குரிய பிரதேசங்களுக்குச் சென்று மக்களுக்கு தனிப்பட்ட முறையில் உதவிசெய்ய வேண்டும்.

மக்கள் மாத்திரமல்ல அரசியல்வாதிகளும் பொறுப்புடனும், விட்டுக் கொடுப்புடனும் செயற்பட வேண்டும்.

கொவிட் 19 வைரஸ் தாக்கம் தீவிரமடைந்துள்ளது.

அரசின் செயற்பாடு தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விமர்சிக்கிறார்கள். தவறுகளைத் திருத்திக்கொண்டு சிறந்த முறையில் பயணிக்க வேண்டும் என ஆட்சியாளர்களுக்கு பல முறை ஆலோசனை வழங்கியுள்ளோம். ஆலோசனைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அவர்கள் தங்களின் விருப்பத்தின் அடிப்படையில் செயற்படுகிறார்கள். ஆகவே இனி ஆலோசனை வழங்குவது பயனற்றது. கொவிட்19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நாட்டு மக்கள் பொறுப்புடனும், விட்டுக் கொடுப்புடனும் செயற்பட வேண்டும் என அரசியல்வாதிகள் குறிப்பிடுகிறார்கள். நாட்டு மக்கள் பலவற்றை தியாகம் செய்து விட்டார்கள். அரசியல்வாதிகளும் தியாகம் செய்ய வேண்டும்.

சுனாமி, போர் ஆகிய காலங்களில் நாட்டு மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டார்கள். தற்போதைய நிலையை ஓர் இடர் நிலையாகக் கருதி செல்வம் உள்ளவர்கள் இல்லாதவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். இனி வரும் காலத்திலாவது அனைவருடைய முகங்களிலும் மகிழ்ச்சி இருக்க ஒரு தீர்மானத்தை ஒன்றிணைந்து எடுப்போம். என்றார். (த-இ)

## யாழில்...

அரியாலை கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 187ஆக உயர்வடைந்துள்ளது. இதவேளை, வடக்கு மாகாணத்தில் கொவிட்19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 250ஐ தாண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ரி20 உலகக்கிண்ணம்
## ஒக்ரோபர் 24ஆம் திகதி இந்தியா –பாக். மோதல்

துபாய், ஓக. 19

ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான அட்டவணையை வெளியிட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் சபை. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்தியா - பாகிஸ்தான் அணிகள் ஒக்ரோபர் 24ஆம் திகதி பலப்பரீட்சை நடத்துகின்றன.

ஒக்ரோபர் 23ஆம் திகதி ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்கா இடையிலான ஆட்டத்துடன் ரி20 உலகக்கிண்ணத் தொடரின் முதன்மைச் சுற்று ஆரம்பிக்கின்றது. மறுநாளே இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

நவம்பர் 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் அரையிறுதி ஆட்டங்களும் நவம்பர் 13ஆம் திகதி இறுதியாட்டமும் இடம்பெறவுள்ளன.

பிரதான சுற்றுக்கு முன்னர், தகுதிச் சுற்று இடம்பெறவுள்ளது. இலங்கை அணி இம்முறை தகுதிச் சுற்று விளையாடியே பிரதான சுற்றுக்குள் நுழைய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இலங்கை அணி தனது தகுதிச் சுற்று ஆட்டங்களில் நமீபியாவை ஒக்ரோபர் 18ஆம் திகதியும், அயர்லாந்தை ஒக்ரோபர் 20ஆம் திகதியும், நெதர்லாந்தை ஒக்ரோபர் 22ஆம் திகதியும் எதிர்கொள்கின்றது. (ம)



# வெற்றி தொடரும் விராட் விடாப்பிடி!

லண்டன், ஓக. 19

**இங்கிலாந்துக்கு எதிராக லோட்ஸ் மைதானத்தில் கிடைத்த வெற்றியுடன் நாம் நின்றுவிடப் போவதில்லை. நிச்சயம் வெற்றிநடை தொடரும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவரான விராட் கோலி.**

இங்கிலாந்துத் தொடர் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுமொத்த அணியையும் நினைத்து மிகப்பெருமை அடைகிறேன். நாங்கள் எங்கள் திட்டத்தை சரியாகச் செயல்படுத்தியுள்ளோம். துடுப்பாட்டத்திலும் சிறப்பாகச் செயல்பட்டோம்.

முதல் 3 நாள்கள் துடுப்பாட்டத்துக்கு ஆடுகளம் ஒத்துழைக்கவில்லை. ஆனால், இரண்டாவது இன்னிங்ஸில் நாங்கள் கடும் நெருக்கடிக்கு மத்தியில் விளையாடிய விதமும், பும்ரா, சமியின் துடுப்பாட்டமும் அற்புதமாக இருந்தது.

60 பந்துப்பரிமாற்றங்களில் நாம் வெற்றி பெற்றுவிடமுடியும் என்று நம்பித்தான் களமிறங்கினோம். எங்களுக்குள் இருந்த சிறிய பதற்றம் எங்களை தொடர்ந்து ஊக்கப்படுத்தி வந்தது. அதிலும் புதிய பந்து எடுத்தபின் எங்களுக்கு திருப்பு முனையாக இருந்தது. நாங்கள் சிறந்த வெற்றியைப் பெறும்போதெல்லாம், கடைசிவரிசையில் உள்ள வீரர்கள் சிறப்பான பங்களிப்பை அளித்துள்ளார்கள்.

கடந்த முறை லோட்ஸ் மைதானத்தில் இசாந்த் சர்மாவின் பந்துவீச்சு அற்புதமாக இருந்தது. இந்த முறை சிராஜின் பந்துவீச்சு ஆகச்சிறந்ததாக இருந்தது. அதிலும் முதல்முறையாக லோட்ஸ் மைதானத்தில் பந்துவீசிய சிராஜ் பிரமாதமாகச் செயல்பட்டார். இன்னும் 3 போட்டிகள் உள்ளன. இந்த வெற்றியோடு மனநிறைவு அடைந்து அடங்கிவிட மாட்டோம் - என்றார். (ம)

## பாகிஸ்தான் – தீவுகள் 2ஆவது டெஸ்ட் நாளை

ஜமைக்கா, ஓக. 19

பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஓர் இலக்கால் திரில் வெற்றிபெற்ற நிலையில் இரண்டாவது ஆட்டம் நாளை ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடரை குறைந்த பட்சம் சமநிலையில் முடிப்பதற்கு இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது. (ம)



**வீடு விற்பனைக்கு**

இருபாலை கிழக்கில் 3 பரப்புக்கு 2 குழி குறைவான காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

**தொடர்பு 071 999 8185**

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம் வீரசைவம் 1988ல் பிறந்த அவிட்டம் கும்பராசியுடைய தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்பு : 077 958 8558**

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் றோயல் கிரனைட் கோணர் நிறுவனத்திற்கு எமது வேலைத் தளத்தில் பணியாற்ற வேலையாட்கள் தேவை. 32 வயதிற்கு உட்பட்டவர்கள்.

**தொடர்பு : 077 358 0547**

**VACANCY**

Sales girls, Salesman, Labour, Promotions (App) girls, Marketing Executives.

**T.P.: 07[illegible] 773 3368**

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

'லயன் பொமனேரியன்' மற்றும் 'டான்' இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு

**077 117 8618, 021 205 1648**

**காணி விற்பனைக்கு**

யாழ் நல்லூர் - செம்மணி வீதியில் நாயன்மார்கட்டில் 7 பரப்புக் காணி பிரதான வீதியின் முகப்புடன் அமைந்துள்ளது விற்பனைக்கு. பிரித்தும் வழங்கப்படும். தொடர்பு:

**077 288 0152, 077 623 4204**

# டெஸ்ட் தரப்படுத்தலில் ஜோ ரூட் முன்னேற்றம்!

லண்டன், ஓக. 19

சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் ஆட்டங்களுக்கான துடுப்பாட்டத் தரப்படுத்தலை நேற்றுப் புதுப்பித்துள்ளது. இங்கிலாந்து அணித்தலைவர் ரூட் இரண்டு இடங்கள் முன்னேறி இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

இந்தியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் முடிவடைந்த ஆட்டத்தில் இங்கிலாந்து தோல்வியடைந்தாலும் தனிப்பட்ட பெறுபேற்றின் அடிப்படையில் ரூட் சிறந்த பங்களிப்பை வழங்கினார். முதல் இன்னிங்ஸில் அவர் ஆட்டமிழக்காது 180 ஓட்டங்களைக் குவித்தார். இதனால் அவர் தரப்படுத்தலில் இரண்டு இடங்கள் முன்னேற்றம் கண்டு நான்காவது இடத்தில் இருந்து இரண்டாவது இடத்துக்குச் சென்றுள்ளார்.

புதிய தரப்படுத்தலின்படி வில்லியம்சன் 901 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும், ரூட் 893 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், சிமித் 891 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், லபுஸ்சேன் 878 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், கோலி 776 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

இந்தியா –இங்கிலாந்து இடையிலான நீண்ட தொடரில் இரண்டு ஆட்டங்கள் மட்டுமே முடிந்துள்ளன. மூன்று ஆட்டங்கள் எஞ்சியுள்ளன. இதனால் ரூட் தரப்படுத்தலில் முதலிடத்துக்கு வருவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம் என்று கருதப்படுகின்றது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.